# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (29-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:207


# அரசும் புலிகளும் நிபந்தனையின்றி பேச வேண்டும்!

## புளொட் சித்தார்த்தன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்29

**"யுத்தம் தொடரும் அதே சமயம் எந்தவித நிபந்தனைகளும் இன்றி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடத்த வேண்டும். அந்தப் பேச்சுக்கள் முக்கிய கட்டத்தை அடையும் போது யுத்தம் தானாகவே நிற்கும் சூழ்நிலை ஏற்படும்."**

**புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

யாழ். நகரில் உள்ள தமது கட்சியின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அந்தக் கட்சியின் பிரமுகர்களான பெனடிக் தனபாலசிங்கம், எஸ்.ரஞ்சன், எஸ்.சிவனேசன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

சித்தார்த்தன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் காணப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் புலிகள் தவிர்ந்த ஏனைய சகலரும் செயற்படுகின்றனர்.

(9 ஆம் பக்கம் பார்க்க)



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்) தலைவரும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படம். முன்னணியின் பிரமுகர்களான பெனடிக் தனபாலசிங்கம், ரஞ்சன், சிவநேசன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் பொ.இராஜேஸ்வரன்)*

### உட் பிணக்கை ஏற்படுத்தும் விதத்திலான

## படை அதிகாரிகள் பற்றிய செய்திகள் தணிக்கை விதிகளை மீறுபவையாம்!

கொழும்பு,ஓக.29

பாதுகாப்புப் படையினர் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய செய்தியை சில செய்தி ஊடகங்கள் அண்மையில் வெளியிட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரின் மனோதிடத்தைப் பாதிக்கக் கூடிய வகையில் வெளியிடப்படும் இராணுவம் தொடர்பான எந்தவொரு செய்தியும் அவசரகாலச் சட்ட (தணிக்கை) விதிகளை மீறுபவையாகும்.

- இவ்வாறு அரசின் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெறுவது தொடர்பாக வெளிவந்த செய்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனப் பாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கூட்டணி தனித்துப் போட்டியிடும்!

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் மகாசபையின் ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகளைக் கொண்ட பொது வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து அங்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

தமது 'உதயசூரியன்' சின்னத்தின் கீழ் பொது வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிவந்தது.

இந்த விடயத்தில் இணக்கம் ஏற்படாததை அடுத்து கூட்டணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது. (உ-3)

## மட்டு. கூட்டணி வேட்பாளர் திடீரென வாபஸ் வாங்கினார்

மட்டக்களப்பு,ஓக.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாரித்த பட்டியலில் இடம்பெற்றிருந்த எஸ்.ஜெயானந்தமூர்த்தி தான் வேட்பாளர் நிலையிலிருந்து விலகிக்கொள்வதாக நேற்று மாலை அறிவித்தார்.

இது குறித்த கடிதம் ஒன்றையும் அவர் நேற்று மாலை கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கென கூட்டணி தயாரித்த பட்டியலிலுள்ள எட்டு வேட்பாளர்களில் இவரின் பெயரும் இடம்பெற்றிருந்தது.

சில தரப்புகளில் இருந்து அனுமதி கிடைக்காததே இவரது விலகலுக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் இடத்துக்கு எஸ்.சத்தியநாதன் என்பவரின் பெயர் பட்டியலில் சேர்க்கப்படவுள்ளதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

### வவுனியா செஞ்சிலுவை பிரமுகர்

## கிஷோர் நேற்று விடுதலை! ஐ.தே.கவில் அவர் போட்டி?

கொழும்பு,ஓக.29

கடந்த 16 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக்கிளைச் செயலாளர் சிவநாதன் கிஷோர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றதை அடுத்து அவரை நீதிமன்றம் விடுவித்தது.

ஐ.தே.கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் முதலாவது வேட்புமனு ஜனநாயக இடதுசாரி முன்னணி தாக்கல்

யாழ்ப்பாணம்,ஓக.29

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான முதலாவது வேட்புமனுவை ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்றுக் காலை 10.20 மணியளவில் யாழ். செயலகத்தில் தாக்கல் செய்தது.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் முதல் நாளன்றே காலையில் ஜனநாயக இடதுசாரி முன்னணி வேட்புமனுத் தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பன்னிரண்டு வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய வேட்பு மனுப் பத்திரத்தை அந்த முன்னணியின் வேட்பாளர் கா.செந்தில்வேல் யாழ். அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான க.சண்முகநாதனிடம் சமர்ப்பித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து இன்று பூமாரி

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் கந்தசாமி கோயில் தீர்த்தக் கேணியில் இன்று காலை முருகப்பெருமான் தீர்த்தமாடும் சமயம் விமானப்படையினரின் ஹெலியிலிருந்து பூமாரி பொழிய ஏற்பாடாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஏற்பாட்டின் கீழ் அந்தூரியம் மலர்களை ஹெலியிலிருந்து தூவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.(உ-க-3)

## கூட்டணிக் குழு நேற்று வருகை

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். மாநகர பிரதி மேயர் என்.ரவிராஜ் ஆகியோரே நேற்று வந்து சேர்ந்தவர்களாவர்.

வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் நேற்று அவர்கள் ஈடுபட்டிருந்தனர். (உ-3)

### வவுனியாவில் வரதர் பிரிவு உட்பட

## 5 மாவட்டங்களில் 8 அணிகள் நேற்று வேட்புமனுத் தாக்கல்!

கொழும்பு,ஓக.29

எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐந்து மாவட்டங்களில் மூன்று கட்சிகளும் ஐந்து சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை நேற்றுத் தாக்கல் செய்தன.

லிபரல் கட்சி இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் -

புதிய இடதுசாரி முன்னணி பொலன்னறுவ மாவட்டத்திலும்-

ஜனநாயக இடதுசாரி முன்னணி யாழ்.மாவட்டத்திலும்-

வேட்புமனுக்களை அந்தந்த மாவட்டச் செயலகங்களில் தாக்கல் செய்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறை,அரியாலை மக்கள் பொருள்களை எடுத்துவர ஏற்பாடு

### ஈ.பி.டி.பி. தரப்பினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.29

அரியாலை மற்றும் கொழும்புத்துறைப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தமது வீடுகளுக்குச் சென்று பொருள்களை எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி அமைப்பு அறிவித்துள்ளது.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமது வீட்டுப் பாவனைப் பொருள்களை எடுத்துவர ஏற்பாடு செய்து தருமாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியிருந்தனர் எனவும்-

இது குறித்து அவர் 512 ஆவது பிரிகேட் தளபதியுடன் பேச்சு நடத்தியதை அடுத்து பொருள்களை எடுத்துவருவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாகவும் - அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

இவ்வாறு பொருள்களை எடுத்துவர விரும்புவோர் இல.64, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் அந்த அமைப்பின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## புனித கன்னி மரியாள் பிறப்பு விழா
### புனித அன்னாள் ஆலயம்
### இளவாலை

30.08.2000 (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் கொடியேற்றமும்,
06.09.2000 (புதன்கிழமை) காலை 7.00 மணிக்கு முதல் நன்மைத் திருப்பலியும்,
07.09.2000 (வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனையும்,
08.09.2000 (வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச் சொரூபப்பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

(யாவும் புதிய நேரப்படி மாலை 5.00 மணிக்கு நவநாள் வழிபாடுகள் இடம்பெறும்)

பங்குத்தந்தையும், ஆலயமக்களும்.

(77782)


## அவசர கலந்துரையாடல்

1998 மாகாண எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கான போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப் பெறாதவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவது சம்பந்தமான முக்கிய முடிவு எடுக்கப்பட இருப்பதனால் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

காலம்: நாளை 30.08.2000 புதன்கிழமை காலை 10.00 (பு.நே)
இடம் : ஆரிய குளம் D.M.I

– பாதிக்கப்பட்டோர் சங்கம்

(77541)

### தென்மராட்சி
## இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கம்

மேற்படி சங்கத்தில் மரண சகாய நிதியில் சேர்ந்து சந்தாப் பணம் கிரமமாகக் கட்டியவர்களில் யாராவது இறந்திருந்தால் பின்னுரிமைக்காரர் போதிய அத்தாட்சியுடனும், அங்கத்துவ அட்டையுடனும் தொடர்பு கொள்ளவும்.

மற்றையோர் அங்கத்துவ இலக்கத்துடன் தற்போதைய முகவரியைத் தந்து உதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஞா.குமாரசாமி
உப செயலாளர்

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
வினிதா தொலைத் தொடர்பு நிலையத்தடி,
நெல்லியடி, கரவெட்டி. (77784)

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
### யாழ்ப்பாணம்

சகல ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் இன்று (2000.08.29) செவ்வாய்க்கிழமை 1.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சமுகமளிக்கவும்.

- அதிபர்

(C/12730)

### பயிற்சி முகாம்

மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அலுவலகத்தினால் நடத்தப்படும் பளுதூக்கல் பயிற்சி முகாம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெறும். (3-5)


NEWTON
342, ஸ்ரான்லி வீதி, ஆரிய குளம் சந்தி.
SPOKEN ENGLISH AND GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்
02.09.2000
2 மணி Sat., Sun.
(77765)

SUBRA - 14
சித்தன்கேணி
SPOKEN ENGLISH AND GRAMMAR
By: BRITTO
ஆரம்பம்:
செவ்வாய் (05.09.2000)
8.30 (பழைய நேரம்)
குறிப்பு: எமது நிறுவனத்தில் ஆங்கிலம் கற்கும் மாணவருக்கு இலவச கணனி பயிற்சி வழங்கப்படும்.
(77788)

நாகம்ஸ்
சுன்னாகம்.
அஜித் - ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
(77724)

ராஜா
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி மற்றும் பலரின் நடிப்பில்
பூவேலி
காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)
(C/12325)


# கொப்பி பார்த்து விடை எழுதினராம்
# 36 ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும்!

கொழும்பு,ஓக.29

ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சையின் போது குறிப்புப் புத்தகங்களைப் பார்த்து விடை எழுதிய 36 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை இடைநிறுத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெல்மடுல்ல கல்கந்த மத்திய மகாவித்தியாலயப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 36 பேருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பரீட்சைத்திணைக்களத்துக்குக் கிடைத்த புகாரினை அடுத்து பெல்மடுல்ல கல்கந்த மகாவித்தியாலயத்துக்குச் சென்ற பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் இரசாயன விஞ்ஞானப் பாடப் பரீட்சையின் போது மாணவர்கள் குறிப்புப் புத்தகங்களைப் பார்த்து விடை எழுதிக்கொண்டிருந்ததைக் கண்டு பிடித்தனர் என்றும் -

இதற்கு அந்த நிலையத்தின் பரிசோதகர்கள் சிலரும் உடந்தையாக இருந்துள்ளமை தெரிய வந்துள்ளது என்றும் -

தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த மாணவர்கள் குற்றவாளிகள் என்று காணப்படின் அவர்களது ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படுவதோடு தண்டனையும் வழங்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் எம்.ஆர்.பி. அமரகோன் தெரிவித்துள்ளார்.

(ஐ-க-186)

## மரண அறிவித்தல்கள்

### S.R.S. தேவதாசன் செல்வகுமார்
(பாபு)

காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த தேவதாசன் செல்வகுமார் 20.08.2000 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் S.R.S. தேவதாசன்-நாகேஸ்வரி தம்பதிகளின் மூத்த மகனும், செல்வராணி, செல்வானந்தன், செல்வகுமாரி, செந்தில்வேலவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமாமகேஸ்வரன், மனோகரன், ஸ்ரீராதாதேவி, சாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-08-2000) திங்கட்கிழமை பி.ப. 5 மணிக்கு கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ.இராசரத்தினம் (P.R.)

*16/1, மல்வத்து றோட்,*
*தெஹிவளை.*
T.P. 077 - 304078 (77773)

### திருமதி பத்மாவதி ஸ்ரீபத்மநாதன்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், இல.69, வைமன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி ஸ்ரீபத்மநாதன் நேற்று (28.08.2000) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற து.ஸ்ரீபத்மநாதன் (Ret. S.D.C. Manager) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி சிவஞானத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி துரைரத்தினத்தின் அன்பு மருமகளும், அருந்ததி, குமுதினி, விஜயராகவன் (ஜேர்மனி), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அ.ஸ்ரீபத்மானந்தா (நிதி முகாமையாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), அ.ஸ்ரீபாஸ்கரன் (யாழ். கொமினிகேசன் & யாழ். சொப்பிங் சென்ரர்), செல்வமீரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், லீலாவதி, புனிதவதி, கனகசபாபதி, இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரமேந்திரா, பீஷ்மன் (யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள்), பவித்திரா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஷாகீசன் (மாணவன் புனித பரியோவான் கல்லூரி), ரேணுகசாயி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-08-2000) செவ்வாய்க்கிழமை காலை வைமன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10-30 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருந்ததி
(மகள்)

*இல.69; வைமன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (77785)

### திருமதி சுவாமிநாதன் இராசாம்பிகை
(இராசாத்தி)

நீர்வேலியைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. சுவாமிநாதன் இராசாம்பிகை (27.08-2000) ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானார்.

இவர் சுவாமிநாதனின் (முன்னாள் இ.போ.ச. சாரதி) அன்பு மனைவியும், தமிழ்மாறன்( ஜேர்மனி), தமிழ்ச்செல்வன் (டென்மார்க்), யசோ (இந்தியா), சுசி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்தாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தவராசா (கிராமசேவகர்) மற்றும் தர்மராசா (நீர்வேலி), துரைசிங்கம் (கொழும்பு), தவலிங்கம் (இந்தியா), கமலாகரன்(சுவிஸ்), இந்திராணி(இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலநாயகம், உமாதேவி, பூமணி, ஜெயலக்சுமி, யோகராணி, செல்வஜோதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (28-08-2000) திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.தர்மராசா
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

*சென்னை,*
*நுங்கம்பாக்கம்,*
*இந்தியா.* (77766)

### வைத்திலிங்கம் நடராசா

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நடராசா 27-08-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராசமலரின் அன்புக் கணவரும், அரியதுரை (இத்தாலி), தவமலர் (சுவிஸ்), சுகிர்தமலர் (யாழ். போதனா வைத்தியசாலை), கௌரிமலர் (ஜேர்மனி), இராசகுலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானமணி, சிவானந்தன், செல்வராசா (றெயில்வே திணைக்களம்), தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிளஸ்டியா, டிலக்சி, நிரோஷன், மீரா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-08-2000) திங்கட்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. சுகிர்தமலர் செல்வராசா
(மகள்)

*சங்குவேலி,*
*மானிப்பாய்.* (77763)

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) யாழ்ப்பாணம்.
# கேள்வி அறிவித்தல்

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால் 2000ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்- 9இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2000ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம். | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. யாழ் மாகாண சுகாதாரப்பிரதிப்பணிப்பாளரின் கீழ்த்தள கட்டடத்திற்கு (களஞ்சியம்) மின் இணைப்பு அமைத்தல். | 1200/- | 250/- |
| 2. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மருந்துக்களஞ்சிய அறை திருத்த வேலையும் சீர்படுத்தலும். | 5000/- | 250/- |
| 3. தாதிகள் விடுதி திருத்த வேலை ஊர்காவற்றுறை, மாவட்ட வைத்தியசாலை. | 4000/- | 250/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒருதொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்று பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

இ.சிறிகாந்தா,
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம் (மா.)
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மா.)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(C/12733)

## இந்துத்துவ அமைப்புடனான பா.ஜ. உறவு பிரிக்க முடியாதது

### என்கிறார் பிரதமர் வாஜ்பாய்



புதுடில்லி,ஓக.29

தீவிர இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சிக்கு இடையேயான உறவை பிரிக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின மூத்த பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சிக்கும், ஆர்.எஸ்.எஸ்ஸிற்கும் இடையே கருத்துவேறுபாடுகள் இல்லை என்றும் - ஒற்றுமையாக இருப்பதாகவும் கூறிய பிரதமர் வாஜ்பாய் பிரச்சினைகள் ஏற்பட்டால் பேசித் தீர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தீவிர இந்துவாத அமைப்பான 'ராஷ்டிரீய சேவா சங்' என்ற ஆர்.எஸ்.எஸ் இயக்கத்திலிருந்து பாரதிய ஜனதா உருவானதும், ஆட்சியில் அமர்ந்ததும் தீவிர இந்துத்துவக் கொள்கைகளை பாரதிய ஜனதாக் கட்சி கைவிட்டதாக ஆர்.எஸ்.எஸ் குற்றஞ்சாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கவை ஆகும். (ஒ-5)

## சிறுபான்மையினருக்கு எதிரான செயல்களை பா.ஜ.க. தடுக்கும்

### புதிய தலைவர் உறுதி

நாக்பூர்,ஓக.29

சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளை பாரதிய ஜனதாக் கட்சி தடுக்கும் என்று அக்கட்சியின் புதிய தலைவரான பங்காரு லட்சுமணன் உறுதி தெரிவித்துள்ளார்.

மராட்டிய மாநிலம் நாக்பூரில நடைபெறும் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

சிறுபான்மையினரும் இந்திய சமுதாயத்தின் ஒரு அங்கம் என்றும், எனவே அவர்களைப் பாதுகாக்கவும், சிறுபான்மையினர் மத்தியில் பா.ஜ.கவை வளர்ச்சியடைய வைக்கவும் தொண்டர்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் மதரீதியான சிறுபான்மை இனமக்களை பாரதிய ஜனதாவுக்கு எதிராகத் தூண்டிவிடும் எதிர்க் கட்சிகளின் சதிகளை முறியடிக்க வருமாறு பங்காரு லட்சுமணன் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சிறுபான்மையினரை தென்னிந்தியரான பங்காரு லட்சுமணன் அரவணைத்து செல்வார் என அவரின் இந்தப் பேச்சை அடுத்து நம்பப்படுகிறது. (ஒ-5)

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 'ஒஸ்டான்கினோ'தொலைகாட்சி ஒளி பரப்புக் கோபுரம் உள்ள கட்டடத்தில் பற்றிய தீ கொழுந்து விட்டெரிந்த காட்சி. ஐரோப்பாவில் மிக உயரமான கட்டடமாகக் கருதப்படும் இந்தக் கோபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மின் தூக்கி ஊழியர் ஒருவரும், 3 தீயணைப்பு வீரர்களும் தீயில் கருகி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இக் கட்டடத்தில் செயற்பட்டு வந்த தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றின் அதி உயர் அழுத்தம் கொண்ட மின் இணைப்பில் ஏற்பட்ட ஒழுக்கே தீக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.



## வீரப்பன் பற்றிய செய்தி வெளியிடுவதில் போட்டி

# 'நெற்றிக்கண்' மணி காட்டுக்கு சென்றார்;

# இழுபறி நிலையில் ராஜ்குமார் விவகாரம்!

சென்னை,ஓகஸ்ட்29

**சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் குறித்த செய்திகளை பிரசுரிப்பதில் தமிழக இதழ்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியினால், 'நெற்றிக்கண்' பத்திரிகையின் ஆசிரியரான மணி செய்தியாளர்கள் சிலருடன் வீரப்பனைச் சந்திக்க முன்னறிவிப்பின்றி காட்டுக்குள் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.**

**மணியின் இச் செயலால் வீரப்பன் கோபமடைந்து, நடிகர் ராஜ்குமார் உள்ளிட்ட 4 பேரின் விடுதலையை மேலும் தாமதிக்கலாம் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.**

இரு மாநில அரசுகளின் தூதராக 'நக்கீரன்' கோபால் வீரப்பனைச் சந்திக்கச் செல்லும் முன்னர், நக்கீரன் இதழின் போட்டிப் பத்திரிகையான 'நெற்றிக்கண்' இதழின் ஆசிரியர் மணி காட்டுக்குள் சென்றுள்ளார்.

வீரப்பன் குறித்த செய்திகளையும் புகைப்படங்களையும், காட்டுக்குச் சென்று திரும்பிய கோபால் தனது 'நக்கீரன்' பத்திரிகையில் வெளியிட்டு வியாபாரத்தைப் பெருக்குவதாகவும், அதனால் தனது பத்திரிகையிலும் வீரப்பன் குறித்த புதிய செய்திகளையும் புகைப்படங்களையும் பிரசுரிக்கவே மணி வீரப்பனைச் சந்திக்கச் சென்றுள்ளதாகவும் தமிழகப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர்.

அதே சமயம் -

வீரப்பனிடம் இருந்து அழைப்பு வந்ததை அடுத்தே மணி காட்டுக்குள் சென்றுள்ளதாக 'நெற்றிக்கண்' அலுவலகத்தினர் தெரிவிக்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் 9 வனக்காவலர்களை வீரப்பனிடமிருந்து 'நக்கீரன்' கோபால் மீட்டு வந்த பின்னர், சில நாள்கள் கழித்து 'நெற்றிக்கண்' மணி ஒரு சட்டத்தரணி உட்பட 3பேருடன் வீரப்பனைச் சந்திக்கச் சென்றார். வீரப்பனுக்கு சட்ட உதவியளித்து அவரைச் சரணடையச் செய்யப் போவதாக மணி அப்போது தெரிவித்திருந்தார்.

ஆனால் வீரப்பனோ சட்டத்தரணி உட்பட மூவரை பணயக் கைதிகளாக்கிக் கொண்டு மணியைத் திருப்பி அனுப்பினார். பின்னர் பெருந்தொகைப் பணம் கொடுத்து அவர்கள் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதைப்போலவே மணியின் தற்போதைய காட்டுப் பயணத்தால் வீரப்பன் கோபமடைய நேரிட்டால் நடிகர் ராஜ்குமார் மற்றும் அவருடன் கடத்தப்பட்டவர்களினது விடுதலை மேலும் தாமதமாகக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. (ஒ)



சமீபத்தில் நான்காவது குழந்தைக்குத் தந்தையாகியுள்ள பிரிட்டிஷ் பிரதமர் றொனி பிளேயர் மனைவி மற்றும் குழந்தை லியோவுடன் தேவாலயத்துக்கு வந்த போது எடுத்தபடம். பிளேயருக்கு 16 மற்றும் 14 வயதுகளில் இரு மகன்களும் 12 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

பிரிட்டனின் கடந்த 150 வருடகாலத்தில் பதவியிலிருந்த போது குழந்தை பெற்றுக் கொண்ட முதலாவது பிரதமர் றொனி பிளேயர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோதலை தடுக்க நிரந்த அமைப்பு

நியூயோர்க்ஓக.29

அமெரிக்காவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள உலக சமாதானத்துக்கான உச்சி மாநாட்டில் பண்பட்ட சமுதாயத்தை உருவாக்கவும் அமைதியை ஏற்படுத்தவும் சிறந்த ஆன்மீகத் தலைவர்களைக் கொண்ட நிரந்தர அமைப்பை ஏற்படுத்துவது குறித்தும் மோதல்கள் ஏற்படும் போது அவர்கள் தலையிட்டு மத்தியஸ்தம் செய்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்படவுள்ளதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## லிபிய அதிபரின் வாக்குறுதியினால்

# மேலும் 5 பணயக் கைதிகள் விடுதலை

### பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளால்

மணிலா,ஓக.29

பிலிப்பைன்ஸில் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளில் 5 பேரை-5 மில்லியன் டொலர்களை பணயத் தொகையாகத் தருவதாக லிபிய அதிபர் முகமட்கடாபி வாக்குறுதி அளித்ததை அடுத்து - இஸ்லாமிய தீவிரவாதிகள் நேற்று விடுதலை செய்தனர்.

3 பிரான்ஸ் நாட்டுப் பெண்கள் மற்றும் இரு தென் ஆபிரிக்கர்களே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

இவர்களின் விடுதலையை அடுத்து எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம்திகதி எஞ்சிய 7 பணயக் கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி மலேசியாவிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளால் 23 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடத்தப்பட்டதும், பின்னர் லிபிய அரசின் தலையீட்டால் பணயக் கைதிகளில் சிலர் விடுவிக்கப்பட்டு வருவதும் தெரிந்தவையே. (ஒ)

# கி.திமோர் விடுதலை இயக்கத் தலைவர் நாட்டின் தலைமையை ஏற்க மறுப்பு!

கிழக்குத் திமோரின் சுதந்திரக் குழுத் தலைவரான சனானா கஸ்மோ தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். நாட்டின் தலைவராகும் வாய்ப்பையும் ஏற்கப் போவதில்லை என்று அவர் கூறிவிட்டார்.

நாட்டின் தலைமைப் பதவிக்கு புதுரத்தம் பாய்ச்சப்பட வேண்டும் என்றும்,அதனால இளையதலைமுறைக்கு வழிவிட்டு விலகுவதாகவும்,கஸ்மோ தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் 23 ஆண்டு கால ஆட்சியிலிருந்து கிழக்குத்திமோர் விடுதலைபெற போராட்டம் நடத்தி வந்தவர் கஸ்மோ.

கிழக்குத்திமோர் சுதந்திரம பெற்ற பின்னர் அங்கு ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் சுதந்திரக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குழுவிற்கு கஸ்மோவை ஐ.நா தலைவராக்கியிருந்தது.

அந்த தலைமைப் பதவியையே அவர் தற்போது ராஜினாமாச் செய்துள்ளார்.

விரைவில் ஜனநாயக ரீதியிலான தேர்தல்களை நடத்தி அங்கு அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தீக்குழம்பைக் கக்கும் எரிமலைக்குள் விமானம் விழுந்ததில் 10பேர் மரணம்!

### சடலங்களை மீட்க முடியாத நிலை!!

சான்ஜோஸ்,ஓக.29

கோஸ்டாரிகாவில் சிறியரக விமானம் ஒன்று எரிமலைக்குள் விழுந்து நொறுங்கியதில் விமானிகள் உட்பட அதில் சென்ற 10 பேரும் உயிரிழந்தனர். எரிமலை தீக்குழம்பைக்கக்குவதால் சடலங்களை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தலைநகர் சான்ஜோஸிலிருந்து வடக்கே 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ள எரிமலை கடந்த சில நாள்களாக தீக்குழம்பைக் கக்கத் தொடங்கியுள்ளது.

இந்த எரிமலையை அருகில் சென்று பார்க்கும் ஆர்வத்தில் 3 அமெரிக்கர்கள், சுவிற்சலாந்தைச் சேர்ந்த இருவர் உட்பட 8 உல்லாசப் பயணிகள் அடங்கிய குழு ஒன்று சிறியரக விமானத்தில் புறப்படுச் சென்றது. விமானத்தை இரு விமானிகள் செலுத்தினர்.

ஆர்வமேலீட்டால் விமானத்தை எரிமலையின் வாயிலுக்கு மிக அருகே செலுத்திய போது, வெப்பத்தினாலும், அப்பகுதியில் சூழ்ந்திருந்த விஷவாயுக்களாலும் விமானிகள் தாக்கப்பட, விமானம் கட்டுப்பாடின்றி எரிமலைக்குள் விழுந்து நொருங்கியது.

சுமார் 5 ஆயிரத்து 360 அடி ஆழமான எரிமலையினுள் விழுந்த விமானம் ஆயிரத்து 300 அடி ஆழத்தில் தட்டையான பகுதியில் விழுந்து நொறுங்கிக் கிடப்பதாகவும், சடலங்களும் அங்கேயே உள்ளதாகவும், விபத்துக்குள்ளான விமானத்தைத் தேடிச் சென்று கண்டுபிடித்த ஹெலிகொப்டர் விமானி தெரிவித்துள்ளார்.

எரிமலையில் தீக்குழம்பு கனன்று கொண்டிருப்பதால் சடலங்களை மீட்க முடியாது உள்ளதாக மீட்புப் பணிக் குழுவினர் தெரிவித்தனர்.

கடந்த வாரம் வழிகாட்டி ஒருவருடன் பெண்மணி ஒருவரும், அவரது மகளும் எரிமலையைப் பார்க்கச் சென்றபோது தீக்குழம்பில் சிக்கினர். அதில் வழிகாட்டி உடல் கருகி இறந்துவிட்டார். தாயும், மகளும், பலத்த எரிகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ)

## மேற்குக்கரையில் பலஸ்தீனருடன் இஸ்ரேல் ராணுவம் கடும் மோதல்

காஸா,ஓக.29

மேற்குக் கரைப்பகுதியில் உள்ள பலஸ்தீனக் கிராமம் ஒன்றில் இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலில் பலஸ்தீனியர்கள் பலர் பலத்த காயமடைந்தனர்.

ஹமாஸ் இயக்க உறுப்பினர்கள் சிலரை இஸ்ரேல் ராணுவத்தினர் கைது செய்ததை அடுத்தே இந்த மோதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மோதலின் பின்னர் மோதல் நடைபெற்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த இஸ்ரேலியப் படையினர் போக்குவரத்துக்களைத் தடை செய்து அப்பகுதியில் பலத்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஒ-5)

## புத்தாயிரத்தில் ஐ.நா.சபைக் கூட்டம்

ஜெனீவா,ஓக.29

ஐ.நா. சபையின் 188 உறுப்பினர்கள் கலந்து கொள்ளும், புத்தாயிரம் ஆண்டின் முதலாவது சிறப்புக் கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ஒ)

சுகாதார விதிமுறை பேணாத

# உணவு நிலையங்கள் மீது தீவிர சட்ட நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, ஓக. 29

சுகாதார விதிமுறைகளை அனுசரித்து இயங்காத உணவு நிலையங்கள் மீது கண்காணிப்புச் செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இம் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்ற உணவு, சுகாதாரம் பேணல் சம்பந்தமான பயிற்சி வகுப்பின் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் 33 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் தலைமையில் பயிற்சிவகுப்புக்கள் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதகர் க. மகாதேவன், வட்டார மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ் இராஜேந்திரன் ஆகியோர் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்து சுகாதார விதிமுறைகளை அனுசரித்து இயங்காத உணவு நிலையங்கள் மீது செப்ரெம்பர் மாதத்தில் இருந்து திடீர் பரிசோதனைகள் மேற்கொண்டு தீவிர சட்ட நடவடிக்கை மேற்கொள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முடிவு செய்துள்ளனர். (ஐ-152)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 31 - 03 - 1978

ஆண்டவன் அடியில் 15 - 09 - 1996

### சந்திரசேகரம் சந்திரகாந்தன்

(தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மாணவன்)

பாசமுள்ள காந்தா உம்மைப் பிரிந்திருக்க
நாங்கள் என்ன பாவம் செய்தோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும்
பிரார்த்திக்கும்......

**பாசமுள்ள அம்மா, அண்ணாமார், உற்றார், உறவினர்கள்.**

பன்னாலை,
தெல்லிப்பழை. (77738)

## நீங்காத நினைவதிலே 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் வைத்திலிங்கம் நடராசா

தோலகட்டி — வயாவிளான்

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி)

மலர்வு 18-06-1933

உதிர்வு 20-08-1990

திதி: 2000—08—29

அன்பு அப்பாவே!
ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும்
உங்களின் நினைவுகள், பாசங்கள்
என்றுமே எமது நெஞ்சத்தை விட்டு அகலாது!
பாசத்தின் பெருமை சொல்லி,
பார்புகழில் கல்வியூட்டி கற்றவர் மத்தியில்
எம்மை தலை நிமிர்ந்து வாழ வைத்த அப்பாவே!

இன்று உந்தன் திர்த்தத்தில் நின்று கொண்டு, எமது கண்ணீர்ப பூக்களை உங்கள் காலடிக்குக் காணிக்கையாக மனம் உருகி அஞ்சலி செலுத்துகின்றோம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

No. 22, 4 ஆம் ஒழுங்கை,
அரசடி றோட்,
கந்தர்மடம். (77758)

## சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 29

கச்சாய் அ. த. க பாடசாலை ஆசிரியர்கள் தமது ஜூலை மாதச் சம்பளக் கொடுப்பனவை நாளை புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனார்மடம் வலயக் கல்விப் பணிமனையிலும் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். [க]

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 29

நல்லூர்க் கந்தசாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணிமுதல் 6 மணிவரை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'மகாபாரதம்' இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று 'வீர அபிமன்யு' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும் (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 29

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்று வரும் நிகழ்ச்சிகள் இன்று ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

முதலில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) சங்கீத இரத்தினம் திருமதி ஸ்ரீ இராமச்சந்திரனின் பண்ணிசை நிகழ்ச்சியும் தொடர்ந்து வழமையான தெய்வீக சொற்பொழிவுத் தொடரில் உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவகதாவாரிதி எம். எஸ். ஸ்ரீதயாளன் 'அன்பு நெறி' எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். (க-30)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### பாக்கியதுரை உதயகுமார்

(உதயன்)

மண்ணில் 1970-06-29

விண்ணில் 1992-08-29

அந்த நாளை நினைக்கையில்
எம் நினைவு இழக்குதடா
பாசமுள்ள உன்னை இழந்து
பரிதவித்தோம் பாதி அழுதோம்
பாதகர்களின் சதி உன் விதியானதா?
அண்ணா என நாம் அழைக்க
மகனே என தாய் அழைக்க
எதுவுமே உன்காதில் விழாவண்ணம்
உன்னை நீண்ட தூரம் அனுப்பி வைத்தார்கள்
ஆண்டு எட்டானாலென்ன
ஆறாது எம் துயரம்
உன் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனை
வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்

'அமர வாசா'
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (77787)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 19 - 09 - 1921

இறப்பு 30 - 07 - 2000

### திருமதி பொன்னம்பலம் செல்லம்மா

(யோகம்)

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஏற்ற உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (29—08—2000) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

ஆ. பொன்னம்பலம்
(இளைப்பாறிய ஆசிரியர்),
அம்மன் கோயிலடி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (77631)

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி கனகசபை காராளசிங்கம்

(பொன்னுத்துரை மாஸ்டர்
இளைப்பாறிய அதிபர், பதுளை)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நாரந்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் நேற்று (28-08-2000) திங்கட்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகசபை இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு நவரத்தினசிங்கம், இராசம்மா, முத்தம்மா, குணரத்தினம் (J P), சபாரத்தினம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற நாகநாதி தம்பதிகளின் (நாரந்தனை வடக்கு) மருமகனும் ஞானசவுந்தரியின் அன்புக் கணவரும், வரதலெட்சுமி (வைமன் வீதி, நல்லூர்), ஜெயபாலன், ஸ்ரீ பாலன் (கனடா), விஜயா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாலிங்கம், திருமதி ஆம்பல் ஜெயபாலன் (கனடா), கிருபாலினி (கனடா), சண்முகானந்தராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நா. சிவஞானம் (கனடா) காலஞ்சென்றவர்களான இராசம்மா, தங்கம்மா, அமிர்தம், கந்தஞானி மாஸ்டர், நல்லம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-08-2000) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது நாரந்தனை வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**கா. த. மகாலிங்கம்** (வைமன் வீதி)
(மருமகன்)

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (77796)

# உதயன்

## மார்க்கத்தைத் திறக்குக

பொதுத் தேர்தலுக்கு ஒக்ரோபர் பத்தாம் திகதி நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவது நேற்று ஆரம்பமாகியதோடு தேர்தல் களம் கட்டப்பட்டுவிட்டது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே, தெற்கில் அரசியல் கொலைகள் ஆரம்பித்துவிட்டன. மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) ஆதரவாளர் - தொண்டர் ஒருவர் - பதினெட்டு வயது இளைஞர்-புத்தாயிரமாம் ஆண்டின் தேர்தலுக்கு முதலாவது "களப் பலி" ஆனார். இந்தச்சம்பவம நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட ஒரு சில நாள்களில் கொழும்பு நகரத்தில் - கிருலப்பனையில் - இடம் பெற்றது. ஜே.வி.பிக்கு ஆதரவாகச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த இந்த இளைஞனைக் குண்டர்கள் குழு ஒன்று கொலை செய்தது.

இவ்வாண்டுத் தேர்தலின் இரண்டாவது "களப்பலி" கடந்த வாரத்தில் கேகாலையில் இடம்பெற்றது. ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவாக இரவில் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த இளைஞனை குண்டர் கோஷ்டி ஒன்று சுட்டுக் கொன்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு முந்திய இந்த இரண்டு கொலைகளையும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களே செய்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சில காலத்திற்கு முன்னர் தேர்தலுக்குப் பிந்திய வன்செயல்களே தென்னிலங்கையில் இடம்பெற்று வந்தன. வெற்றியை அனேகமாக எதிர்பார்த்த போதிலும் தேர்தலில் தோல்வியைத் தழுவிய கட்சி, வன்செயல்களைத் தனது குண்டர்களைக் கொண்டு கட்டவிழ்த்து விடுவது வழக்கம். அனேகமாகத் தமிழர்களே இந்த வன்செயல்களினால் பாதிக்கப்படுவதும் உண்டு.

ஆனால் சமீபகாலமாக, தேர்தலுக்கு முன்னரே, வன்செயல்கள் நடைபெறுகின்றன. தேர்தல் என்பது அமைதியான சூழ்நிலையில், மக்கள் அச்சமோ, பலாத்காரமோ இல்லாத சூழ்நிலையில் சுதந்திரமாகத் தாம் விரும்பிய கட்சிக்கு, வேட்பாளருக்கு வாக்களிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான ஜனநாயகத் தேர்தலாக இருக்கும்.

தேர்தலுக்கு முன்னரே தெற்கில் கொலைகள் நடைபெற்றிருப்பது குறித்து மொத்த மகாநாயக்கர்களும் கவலை தெரிவித்துள்ளனர். தேர்தல் கொலைகள் தொடருமாயின் நாடு சுடுகாடாகி விடும் என்றும் எச்சரித்துள்ளனர். தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றால் அதற்குச் சகல கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

தெற்கில் வன்முறைகள் இல்லாத தேர்தல் நடைபெற வேண்டும் என்று விரும்பும் பௌத்த மகாநாயக்கர்கள், தேர்தல் காலத்திலும் வடக்கு - கிழக்கில் போர் தொடரவேண்டும் என்ற தமது கருத்தை மாற்றியதாகத் தகவல் இல்லை.

இப்பிரதேசத்தில் போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளை அழித்து விட வேண்டும் என்று, பௌத்த மதகுருக்கள் மட்டுமன்றி ஏனைய சிங்களக் கடுங் கோட்பாளர்களும், பேரினவாதப் போக்குடையவர்களும் கூறிவருகின்றனர். தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்கக் கூடாது என்பதனையே தமது கொள்கையாக வரித்துக் கொண்ட இவர்கள், வடக்கு - கிழக்கில் தேர்தல் காலத்தில் என்ன நடைபெற்றாலும் கவலைப்படப் போவதில்லை.

தேர்தல் வன்செயல்களைப் போலவே போர் அனர்த்தங்களும் மக்கள் மனங்களில் அச்சத்தையும் பதற்றத்தையும் தோற்றுவிப்பன. ஏனையோரின் கருத்து அல்லது அக்கறை எவ்விதமாக - எதுவாக - இருப்பினும், தேர்தலை நாடு முழுவதிலுமே அமைதியான சூழ்நிலையில், ஜனநாயக வரன்முறைகளுக்கு ஏற்ப நடத்த வேண்டியதுஅரசாங்கத்தின்பொறுப்பு. அதன் பொருட்டு தெற்கில் தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவது எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்குத் தமிழ்ப்பகுதிகளில் போரைத் தணிக்கவும் நடவடிக்கை - முயற்சி - தேவை. இதற்கான மார்க்கத்தைத் திறப்பதற்கு அரசு தனக்குள்ள பெரும் பங்கை ஆற்ற முன்வரவேண்டும். அவ்வாறின்றி, தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாலும் சரி, பெயருக்குத் தேர்தலை நடத்தி, தன்னை ஆதரிக்கக் கூடிய சிலரை எம்.பிக்களாக்கி விட்டால் சரி என்று கருதுவது பெரும் கேலிக்கூத்தாகவே முடியும்.

# சந்நிதி மஹோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,ஓக.29

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 16 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு கைலாசவாகன உற்சவமும் இடம் பெறும். பின்னர் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தேர், தீர்த்த உற்சவங்கள் தவிர ஏனைய உற்சவங்களின் காலைத் திருவிழாக்கள் காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழாக்கள் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறை பஸ் டிப்போ விசேட பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது.

(க-173-109-15)

# சந்நிதி முருகன் உற்சவத்தை ஒட்டி ஊரடங்கைத் தளர்த்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.29

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாவதை ஒட்டி அந்தப் பகுதியில் இரவு ஊரடங்கை 9 மணி வரை தளர்த்துமாறும் -

இறுதி மூன்றுநாள் உற்சவத்தின் போது ஊரடங்கை முற்றாக நீக்க வேண்டும் என்றும் -

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய உற்சவம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனையில் நடந்த கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக நிர்வாக அலுவலர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

★ சுகாதாரம் சம்பந்தமாக வல்வை நகரசபையுடன் தொடர்பு கொள்ளல். உற்சவ நாள்களில் தற்காலிக மலகூடங்களை அமைக்கும் போது அதனைக் கடைகளுக்கு அண்மையில் அமைக்கக்கூடாது.

★ உணவுப் பண்டங்களை, குறிப்பாக இனிப்பு வகைகளை விற்பனை செய்வோர் அவற்றைக் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யவேண்டும்.

★ இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உற்சவ காலத்தில் இறுதி மூன்று நாள்களும் மருத்துவ வசதிகளையும், 'அம்புலன்ஸ்' சேவையையும் வழங்கும். வைத்திய சேவையை மேற்கொள்ள தனியாக தங்குமிட வசதிகளை அமைத்தல்.

★ ஆற்றங்கரை ஓரமாக பிரதான பாதைக்கு வரும் வீதியைத் திருத்தம் செய்தல்.

★ வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை, சிற்றூர்திச் சங்கம் என்பன வழமைபோல் சேவையை வழங்கும்.

★ அடியார்களின் ஒழுங்கைப் பேண சாரணர் சேவை, பரியோவான் முதலுதவிச்சேவை மேற்கொள்ளல்.

★ ஆலய உற்சவகாலங்களில் 15 நாள்களும் பொலீஸ் நிலையம் அமைத்து இரவு, பகல் பாதுகாப்பு வழங்குதல்.

ஆலய உற்சவ காலங்களில் வல்லை ஊடாக பிரயாணத்தை மேற்கொள்ளும் அடியவர்களுக்கு 'பாஸ்' வழங்கும் நடைமுறை இம்முறை இல்லை எனப் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் பொலிகண்டி இராணுவ முகாமைச்சேர்ந்த லெப்டினன் பி.எச்.டி.பத்மகுமார, வல்வெட்டித்துறை பொலீஸ்நிலைய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூ. சுபதபாலா, வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறைசாலை முகாமையாளர் எஸ். கமலநாதன் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர்.(ஐ-109-173-15)

## பட்டலந்தை விவகாரம்:

# சி.ஐ.டியின் அலுவலகத்துக்கு ரணில் சமுகம் தரமாட்டார்!

கொழும்பு,ஓக.29

பட்டலந்த சித்திரவதைமுகாம் விவகாரம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காகத் தமது தலைவர் ரணில் விக்கிரம சிங்கவோ நானோ குற்றப்புலனாய்வுத் துறையின் தலைமையகத்துக்குச் செல்லப் போவதில்லை என்று ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொறளை தெரிவித்தார்.

"இது தொடர்பாக விசாரணைக்காக வேண்டுமானால் என்னைக் கைது செய்யட்டும். ஆனால் அரசாங்கம் மேற்கொள்ளும் பிரசார விசாரணைக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம்" என்று அவர் மேலும் சொன்னார்.

தேவையற்ற வகையில் இந்த விவகாரத்தில் எம்மை மாட்டி வைத்து லாபம் பெற அரசு முனைகின்றது.

அதற்காகத் தமது தொடர்பு சாதனத்துறையையும் அரசு தூண்டி விட்டுள்ளது.

இந்த விடயத்தைப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தாமல் உண்மையில் நேர்மையாக அணுக அரசு விரும்பினால் எம்மைக் கைது செய்யட்டும். நாம் அதற்கு முகம் கொடுக்கத் தயாராக உள்ளோம் - என்று அவர் மேலும் சொன்னார். (உ-3)

## மணிவிழா ஏற்பாட்டுக் குழு

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸின் மணிவிழாவை முன்னிட்டு மணிவிழா ஏற்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி. கமலநாதன் இந்தக்குழுவின் தலைவராகவும், மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் செயலாளராகவும், திருமதி ஞா. கணேசநாதன் பொருளாளராகவும் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மணிவிழா அமைப்புக் குழுத் தெரிவு தொடர்பான கூட்டம் கடந்த 23ஆம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மணிவிழாவை முன்னிட்டு மலர் ஒன்றை வெளியிடுவது என்றும் - இந்த நூல் மாணவர்களுக்குப் பயன்படும் பல்வேறு அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் - தீர்மானிக்கப்பட்டது.

மணிவிழா தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவிப்பவர்கள் '250, பலாலி வீதி, புலவர்வளவு, திருநெல்வேலி' என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## சங்கக்கிளை மீண்டும் திறப்பு

அரியாலை,ஓக.29

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓட்டுமடம் பகுதியில் அமைந்திருக்கும் நாலாம் இலக்கக் கிளை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களின் வசதி கருதி இந்தக் கிளை திறந்து வைக்கப்பட்டதாகச் சங்கத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

(ஐ-17)

**உதயவாக்கு**

குழந்தைகளுக்குப் பொருள் தேடி வைப்பதைவிட நல்ல பழக்கங்களைப் பழக்கி வைப்பதே தந்தை தேடி வைக்கும் உண்மைச் செல்வமாகும்.

- *வாட்லி*

**நாளை**
ஆவணி 14
புதன்கிழமை
*திதி:* பிரதமை
பிற்பகல் 2.31 வரை
*நட்சத்திரம்:* பூரம்
பிற்பகல் 5.36 வரை.
*சுபநேரம்:* 4.35 - 6.05
*ராகுகாலம்:* 12.05 - 1.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## வேலாடும் தீர்த்தம்

வேதவொலி மந்திரங்கள் விண்ணதிரும் நல்லூரில்
தேவமொழித் திருமுறைகள் மண்குளிரும் செவ்வேளூர்
தீதகல அடியார்கள் செய்ததவம் நாலாறு
பெருவிரத நாள்முடிய வருதீர்த்தம் வேலாடும்
பேதமற இருமாதர் பேரின்ப நீராடல்
பேறுதரும் ஆறுமுகன் வினைதீர்க்கும் அருமருந்து
நீதமென அருந்தியவர் தேவருல கெய்தியந்த
நல்லையங் குமரனடி நற்கதியேபெற்றிடுவர்

*"கை...தபூரான்"*

## தீர்த்தன் நீரே!

தீத்தனாய் நின்றாய் அரக்கர்
தீங்குகள் தீர்த்துத் தேவர்
காத்தனாய் வந்தாய் அடியர்
காவலாய்(ப்) பலகால் ஆனாய்;
ஆர்த்தனம் வேலா உந்தன்
அருள்மிகு தீத்தம் ஆடி;
நேர்த்துனம் நிறைந்து வாழ!
நீஅருள்! நல்லூர்க் கந்தா!

*முருகனடியான்*

## இடர் களைவாய்!

சத்தி உமைபாலா சண்முக வடிவேலா
முத்தி அளித்திடும் குகனே சரவணபவனே
நித்தம் அடியார்கள் நின்பதம் போற்றுகின்றார்
சித்தம் இரங்கி இடர் களைவாய் நல்லூர்ப் பெருமானே

சத்தி வடிவேலுடன் வள்ளி தெய்வயானையுடன்
பக்தர் குழாம் சூழ தீர்த்தப் பவனி வருபவரே
தேவர் துயர் தீர்க்க அவுணர் படை அழித்தவரே
எங்கள் துயர் நீக்கிக் காத்தருள்வாய் முருகோனே!

*த.நமசிவாயம் (பெரியவிளான்)*

## சுற்றிவந்தால் துன்பமெலாம் ஓடும்!

வெள்ளமென மெய்யடியார் சூழமொரு வீதி
வேலெடுத்து வினைகளெலாம் தீர்க்குமொரு வீதி
கள்ளமிலா அடியர் குழாம் கலந்து நிற்கும் வீதி
கந்தனவன் சேவடிகள் பரவு மொரு வீதி

வள்ளி தெய்வயானையுடன் வலம் வருமவ்வீதி
வானிருந்து பூமாரி பொழியுமொரு வீதி
துள்ளிவரு காவடிகள் தூக்குமொரு வீதி
சுற்றிவந்தால் துன்பமெலாம் ஓடிடுமே வாரீர்!

*ப.க.மகாதேவா*

## வித்தகா உனக்கு அடைக்கலமே!

அன்னையின் துணையைச் சிறுமையிழந்தென்
னருந்துணை தன்னையே யடைந்து
ஆமெதற்கு கெனுமென் முகத்தினைப் பார்த்ததை
யாவிது வேண்டுமென் றினிய
கன்னலை நிகர்த்த குதலைவாய் மொழியாற்
கருணையோ டென்னையே வேண்டுங்
காதலா ரீருமைத் தருக்கும் நான் வளர்த்த
காதலன் றனக்குமா ரென்போல்
மன்னுமன் விடத்தி லன்புனா ரெனபுள்
வருந்தினேன் னவர் அகங் கல்வி
வண்மை நல் லொழுக்க முள்ளராய் வளர
வரந்தர வேண்டுமுன் புனத்தில்
மின்னிய குலவள்ளியை விழைந்தெடுத்த
வேலவனே விமலனே நல்லை
வேந்தனே கந்தா சேந்தனே சுவாமி
வித்தகா வுனக் கடைக்கலமே

* * * * * * *

சத்துருக் கனமுயிர் பறிக்கவரினுங் கொடிய
தண்டனை புரிந்து விடினும்
தங்க பொன்மனை பூமிநீதியே வலாளரைத்
தான் பறித் தாள வரினும்
சித்தமனு வளவெனினு மஞ்சா வணங்கா
முடித்தீர மன்னனென்று
செப்பு பெயர் கொண்ட துரியோதனன் போலெனைச்
செப்பிடத் தெவ்வர் சங்கம்
இத்தலத்தினால் வைத்தெவ் வினையினுஞ் செயமெனக்
கீந்த தயாவு சொருபமே
ஈசுதரு ணத்திலென் மீது தயவெற்றதென்
னென் பொய்க்குரம்பையிந்த
நத்துசிறைமனை பெற்றுழல வைத்ததும்
நன்மைக்கெனக் கருதியோ
நாயகா குறவள்ளி தேசிகா திருநல்லை
நகர் வாச முருகேசனே!


*அமரர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (1906 ஆம் ஆண்டு பாடியது)*



# அதிகரிக்கும் கிரிக்கெட் போட்டிகள்! அதன் விளைவு.....?

# பந்துவீச்சாளர்களைப் படாய்ப்படுத்தும் பந்துக்கிண்ண

கிரிக்கெட் போட்டிகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கு ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான அபிமானத்தினால் சர்வதேசக் கிரிக்கெட் அந்தஸ்துப்பெற்ற நாட்டு அணிகள் எல்லாம் ஏராளமான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிவருகின்றன. டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக ஒரு நாட்டுக்குச் செல்லும் இன்னோர் நாட்டுக் கிரிக்கெட் அணி, டெஸ்ட் போட்டிகள் முடிவுற்றதும் ரசிகர்களை மகிழ்விப்பதற்காக அந்நாட்டின் அணியுடன் மூன்று அல்லது ஐந்து ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட போட்டித் தொடர் ஒன்றில் பங்குபற்றுவது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. டெஸ்ட் போட்டிகளுக்கு இருந்த மதிப்பு முன்போல இப்போது இல்லை. உலகின் போக்கு அதிவேகத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் மாறிவருவதால் பொழுதுபோக்காக ரசிக்கும்விளையாட்டுக்களில் கூட அளவுக்கதிகமான விரைவையும், விறுவிறுப்பையும் மக்கள் எதிர்பார்க்கின்றனர். நின்று - நிலைத்து - நிதானமாக - ஐந்து நாள்களுக்கு ஆடப்படும் டெஸ்ட் போட்டிகள் மக்களுக்குச் சலிப்பூட்டத் தொடங்கிவிட்டன. பாரம்பரியத்துக்காக ஆடப்படும் நிலைமைக்கு இன்று டெஸ்ட் போட்டிகள் உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. விளம்பரதாரர்கள், ஒளிபரப்பு நிறுவனத்தினர் கூட ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் பக்கமே தமது கூடிய கவனத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.





**1 -பசைநீர்ச்சுரப்பி, 2 -தோள்பட்டை எலும்பு, 3 -மேல்தசை, 4 -தோள்பட்டை, 5 -மேல்கை.**

இதனால் கிரிக்கெட் விளையாடும் நாடுகளும் தமது நாட்டு அணிகளை பணமும், புகழும் அள்ளிக் கொடுக்கும் ஒரு நாள் போட்டிகளிலேயே அதிகமாக ஈடுபடுத்தி வருகின்றன. முன்பு ஒரு வருடத்தில் ஒரு தடவை மற்றைய நாட்டுக்குச் சுற்றுப்பயணம் செய்வதற்கே பல தடவைகள் சிந்தித்து முடிவெடுக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் இன்று வருடத்தில் மூன்று, நான்கு தடவைகள் கூட தமது அணியை குறித்த ஓர் நாட்டுக்கு அனுப்புவதற்குத் தயங்குவதில்லை. ஒரு நாள் போட்டிகளை மையமாக வைத்தே இப்போது சுற்றுப் பயணங்களை ஒழுங்கு செய்யும் இவர்கள் மரபுக்காக சில டெஸ்ட் ஆட்டங்களில் ஈடுபடவும் தமது அணிகளைத் தயார் செய்கின்றனர். இதனால் ஒவ்வொரு நாட்டு அணிகளும் தொடர்ந்து பல ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது!

தொடர்ந்து பல கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான விடயம்தான். பணத்தை அள்ளிக் குவிப்பதால் நாட்டு நிர்வாகங்களும் கிரிக்கெட்போட்டிகளை அதிகளவில் ஏற்பாடு செய்கின்றன. இதனால் பாதிப்புறுவது கிரிக்கெட் வீரர்கள் தான். அதிகளவில் சுற்றுப்போட்டிகளை ஒழுங்கு செய்யும் கிரிக்கெட் நிர்வாகிகள் அணிவீரர்களின் நலன்களில் போதிய கவனம் செலுத்துவதில்லை. குறிப்பாக ஆசிய நாடுகளின் வீரர்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

மேலைத்தேய நாடுகள் இப்போது தமது கிரிக்கெட் வீரர்களுக்குப் போதிய ஓய்வை வழங்குவதற்கு எத்தனித்து வருகின்றன. டெஸ்ட் போட்டிகளுக்கு என்று ஓர் அணி - ஒரு நாள் போட்டிகளுக்கு என்று ஓர் அணி - என்ற விதத்தில் இரு அணிகளைத் தயார் செய்வதன் மூலம் வீரர்களுக்குப் போதிய ஓய்வைக் கிடைக்கச் செய்கின்றன. இதனால் உடல் ரீதியான பாதிப்புகளிலிருந்து பெருமளவில் பாதுகாக்கப்படும் வீரர்கள் அதிக உத்வேகத்துடன் போட்டிகளில் பங்குபற்றி தமது நாட்டு அணிகளுக்கு வெற்றிமேல் வெற்றியாகத் தேடிக் கொடுக்க முடிகின்றது. ஆனால் கட்டுக் கோப்பான சிறந்த ஓர் அணியையே பேணமுடியாத சில நாடுகள் - குறிப் பாக ஆசிய நாடுகள் - பெரும் எண் ணிக்கையான போட்டிகளில் அந்த ஓர் அணியையே பங்குபற்ற வைத்து அவற்றில் தோல்விகளைச் சந்திக்க நேர்வதோடு அணிவீரர்களையும் பெரும் உடற்சோர்வுக்கு உள்ளாக்கி அவர்களின் எதிர்கால கிரிக்கெட் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி விடுகின்றன.

### பாதிப்புறும் பந்து வீச்சாளர்கள்

தொடர்ச்சியாகப் பல போட்டிகளில் பங்குபற்றி விளையாடுவதால் துடுப்பாட்ட வீரர்களும் ஓரளவுக்கு உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டாலும் பந்துவீச்சாளர்களே மிக அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நிலவும் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களின் பற்றாக்குறை காரணமாக அவ்வணிகளில் விளையாடும் ஓரிரண்டு சிறந்த வேகப்பந்துவீச்சாளர்களின் தோள்களில் ஏற்றப்படும் சுமை அவர்களின் திறமை நன்கு வெளிப்படுத்தப்படுவதைத் தடுத்து விடுகிறது.

துடுப்பாட்டக்காரர்களில் ஒரு சிலர் நன்றாக ஆடாவிட்டாலும் மற்றைய வீரர்களால் நன்றாக விளையாடி ஓட்டங்களைக் குவிக்கமுடிகிறது. ஆனால் அணியின் முதன்மைப் பந்துவீச்சாளர் சோபிக்காமல் போய்விட்டால் அணி தோல்வியின் விளிம்புக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இந்நிலைமை சில வருடங்களுக்கு முன் உலக நாட்டு அணிகள் அனைத்துக்குமே பொதுவான பிரச்சினையாக இருந்தது. ஆனால் பல பயிற்சி நிலையங்களை அமைத்து இளைஞர்களின் பந்துவீச்சு ஆற்றலை வளர்த்தெடுத்து சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கிக் கொண்டதன் மூலம் பல அணிகள் தமது பிரச்சினைக்குத் தீர்வு கண்டு கொண்டுவிட்டன. ஆனால் சில அணிகள் தொடர்ந்தும் தமது முன்ன



ஸ்ரீநாத்

ணிப் பந்து வீச்சாளர்களை மட்டுமே நம்பிக் களத்தில் இறங்கி அவர்களையும் தொல்லைகளுக்காளாக்கி வெற்றி வாய்ப்புக்களையும் இழந்து வருகின்றன.

வேகப்பந்து வீச்சில் உலகின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்து வந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிகூட சில காலம் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாமல் தடுமாற நேரிட்டது. கொட்னி வோல்ஷ், அம்ப்ரோஸ் ஆகியோர் அணியில் இடம்பெற்றதும் அவர்களிருவருமாக புதிய இளம் பந்து வீச்சாளர்களை வழி நடத்தி அணிக்குப் பலம் சேர்த்து வருவதும் இக்குறையை நீக்கிவிட்டன. இப்போது இவர்களின் வழிநடத்தலின் கீழ் பல இளம் பந்து வீச்சாளர்கள் அணியில் இடம்பிடித்து நன்றாக விளையாடி வருகிறார்கள். இதனால் பந்து வீச்சாளர்களுக்குப் போதிய ஓய்வும் கிடைக்கிறது.

இன்று உலகின் மிகச்சிறந்த பந்து வீச்சாளராகக் கருதப்படும் ஆஸ்திரேலிய அணியின் கிளென் மக்ராத் கூட தோள்வலியால் அவஸ்தைப்பட்டவர்தான். தனியாக அணியின் வெற்றிக்கு உழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோது அவரின் தோளும் வலியால் துவண்டது. மக்ராத் ஓய்வெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் ஆஸ்திரேலிய அணி மேலாளர்கள் புதிய வேகப்பந்து வீச்சாளர்களைத் தேட முனைந்தனர். அதில் வெற்றியும் கண்டனர். இன்று மக்ராத்தின் தோள்களில் அதிகச்சுமை இல்லை. அவர் சில விக்கெட்டுக்களை வீழ்த்தி ஆரம்பித்து வைக்க, சக இளம் பந்துவீச்சாளர்கள் மீதி விக்கெட்டுகளைச் சாய்த்து ஆட்டத்தை முடித்து வைக்கின்றனர். இது அணியின் வெற்றிக்குப் பெரும் சாதகமாக அமைந்துள்ளது.

ஆசிய நாட்டு அணிகளில் பாகிஸ்தான் பல வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டிருந்தாலும் அவர்கள் தமது உடல்நிலைபற்றி அதிகமாக அக்கறைப்படாததாலோ என்னவோ அவர்களால் தொடர்ந்து போட்டிகளில் பங்குபற்ற முடியாமல் போய்விடுகிறது. புதியவர்கள் வருகிறார்கள்; நன்றாகப் பந்து வீசுகிறார்கள்; சில நாள்களில் காணாமல் போயும் விடுகிறார்கள். இது வேகப்பந்து வீச்சின் ஆரோக்கியத்திற்குக் கேடான விடயமே.

இலங்கை அணியின் முதன்மைப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ். இவரும் அணிக்காக அளவுக்கு அதிகமாகவே உழைக்க வேண்டி இருப்பதால் தோள் வலி காரணமாக அடிக்கடி தோளில் சிகிச்சை செய்து கொண்டு ஓய்வெடுக்கும்படி ஆகிவிடுகிறது. முரளிதரன் இப்போது மிகச்சிறப்பாகப் பந்து வீசி வருவதால் அணிக்குப் பந்து வீச்சாளர்களின் பற்றாக்குறை பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் முரளிதரனுக்கும் போதியளவு ஓய்வுகொடுத்து அவரது ஆரோக்கியத்தைப் பேணுவது அவசியம் என்பதால் அதிகளவில் புதிய இளம்பந்து வீச்சாளர்களை அணியில் இடம்பெறச்செய்து வருகிறது இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

வேகப்பந்து வீச்சாளர்களின் பற்றாக்குறை மிகப்பெரிதாகப் பாதித்திருப்பது இந்தியக் கிரிக்கெட் அணியைத்தான். கபில்தேவிற்குப் பிறகு ஸ்ரீநாத்தையும் பிரசாத்தையும் விட்டால் வேறு ஆளே இல்லை என்ற நிலையில் அல்லாடுகிறது இந்திய அணி. அகார்கர் அவ்வப்போது பரவாயில்லாமல் பந்துவீசினாலும் அணிக்கு உத்வேகம் தரும் வகையில் அவர் இல்லை. இந்நிலையில் ஸ்ரீநாத்தின் தோளிலோ தாங்கமுடியாத சுமை. ஏறத்தாழ மூன்று வருடங்களாக தோள்பட்டை வலியால் தவித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீநாத், 'மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த' நிலையில் இன்று இருக்கிறார். இவரது எதிர்காலக் கிரிக்கெட் வாழ்க்கையே கேள்விக் குறியாக்கிவிட்டது அவரின் தோளில் ஏற்பட்ட பந்துக்கிண்ணமூட்டு வலி! தொடர்ந்து பல போட்டிகளில் விளையாட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்ற போது ஓர் வேகப்பந்து வீச்சாளரின் உடல்நிலை பாதிப்புறும் விதத்துக்கும், அவர் எதிர்காலத்தில் பந்து வீசும்போது அவருக்கு ஏற்படும் பின் விளைவுகளுக்கும் இன்று எம்முன் ஆதாரமாக நிற்பவர் ஸ்ரீநாத்.

### மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்தவர்

1997 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு இந்திய அணி சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீநாத்திற்கு தோள்பட்டையில் வலி பெரும் பிரச்சினை கொடுக்க ஆரம்பித்தது. வலி பொறுக்க இயலாமல் தவித்த ஸ்ரீநாத்தை ஜோஹனெஸ்பேர்க் நகரில் ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றார் அவரது பயிற்றுநர். ஸ்ரீநாத்தைப் பரிசோதித்த மருத்துவர் தோள்பட்டையில் உள்சதை கிழிந்திருப்பதாகவும் அவர் இனி கிரிக்கெட் விளையாடுவது கடினம் என்றும் தெரிவித்தார். தென்னாபிரிக்காவில் இருந்து ஒளிப்பரப்புச் செய்யப்பட்ட டெஸ்ட் போட்டிகளின் நேரடி அஞ்சலில் ஸ்ரீநாத் பட்ட வேதனை நன்கு தெரிந்தது. முகம் கறுத்து உடலில் தெம்பே இல்லாதவர் போலப் பந்து வீசினார். என்றாலும் அவரால் ஓய்வு எடுக்க இயலவில்லை; தொடர்ந்தும் பந்துவீச வேண்டியிருந்தது. இப்படியே கடும் உடல் உபாதையுடன் விளையாடி மூன்று டெஸ்ட் போட்டிகளில் 148 ஓவர்களை வீசித்தள்ளினார் அவர். "பந்தை வீசக்கிளம்பிய இடத்துக்கு அவரைக் கொண்டுபோக 'ஸ்ட்ரெச்... தேவைப்படும் போலிருக்கிறது" என... அப்போது ஓர் வர்ணனையாளர் ச... யது அப்பட்டமான உண்மை. இ... அதிக வேலைப்பளு பயங்கரமான... திரவதைதான். ஆனாலும் ஸ்ரீந... பெரிய மனது பண்ணி அதைப்ப... சட்டை செய்யாமல் தொடர்ந்து ப... வீசிக் கொண்டிருந்தார்.

அதற்கு முன்பு இங்கிலாந்துச்... றுப்பயணத்திலும் அவர் ஐந்து இ... னிங்ஸ்களில் 152 ஓவர்களை ... வேண்டிய தேவை ஏற்பட்டிருந்த...



வெஸ் ஹோல்

மேற்கிந்திய தீவுகள் அணியின் மு... னாள் வேகப்பந்துவீச்சாளர் மைக்கே... ஹோல்டிங்கிற்கும் இதே பிரச்சி... இருந்தது. ஸ்ரீநாத்தின் தோள்வ... பற்றி அவர் கருத்துத் தெரிவிக்... யில், ஸ்ரீநாத் வீச வேண்டியிருந்த ஓ... களின் எண்ணிக்கையும் ஒவ்வொ... முறையும் அவர் எவ்வளவு நேர... தொடர்ந்து வீசவேண்டியிருந்தது என்... தும் முக்கியம் என்று குறிப்பிட்... ஓர் குறித்த காலப்பகுதியில் ... மாதங்களில் - 9 டெஸ்ட் போட்டிகளி... 428 ஓவர்கள் வீசியிருக்கிறார் ஸ்ரீநா... டெஸ்ட் பேட்டிகளில் உலகி... வேறெந்தப் பந்துவீச்சாளர் போட்டை... விடவும் இது அதிகமாகும். இது மட்... மல்லாமல் ஒரு நாள் போட்டிகளி... 366 ஓவர்களையும் இதே காலப் ப... தியில் அவர் வீசியிருக்கிறார்.

### - விசிறி -

ஒரு காலத்தில் கபில்தேவிற்கு... இதுபோன்ற வேலைப்பளு இருந்தத... 1978 டிசெம்பர் முதல் 1980 பெப்ரவ... வரையான 14 மாதங்களில் 801 ஓவ... களை அவர் வீசினார். ஆனா... அவற்றை 23 டெஸ்ட் போட்டிகளி... தான் வீசினார். ஒரு போட்டிக்குச் சர... சரியாக 35 ஓவர்கள் என்ற நியா... மான கணக்கில். அதனால் அவ... தோளுக்கு ஸ்ரீநாத் போல தொடர்ந்து... மேலதிகமான சுமை இல்லை. அவ... ருக்குப் போதுமான ஓய்வு கிடைத்தது... அப்படியிருந்தும் கூட கபில்தேவிற்கு... தோளில் வலி ஏற்பட்டது. ஆனா... ஸ்ரீநாத்திற்கோ அவ்வாறில்லை. அவ... களைத்துச் சோர்ந்து துவண்டு போகு... வரை தொடர்ந்து பந்து வீசவேண்டிய... ருந்தது. இந்திய அணி தொடர்ந்த... போட்டிகளில் பங்குபற்றியதே ஸ்ரீநா... தின் தோள்வலிக்குப் பிரதான கா... ணம். 1996 - 1997 காலப்பகுதியி... 13 மாதங்களில் 96 நாள்களுக்கு இ... திய அணி போட்டிகளில் பங்குபற்றி... யது. இதே காலப்பகுதியில் வேறெந்த... நாட்டு கிரிக்கெட் அணியையும் விட... இது அதிகம். அதேசமயம் ஸ்ரீநாத்தை... அவரது அணித் தலைவர்கள் கை...

## பந்துக்கிண்ண மூட்டுத்தசைக் காயம்

பந்துவீச்சாளர்களின் எமன் இந்தக் காயம்தான். ஈட்டி எறிதல், தட்டு எறிதல், குண்டு எறிதல் போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களுக்கும் இது ஏற்படுகிறது என்றாலும், அவர்கள் தோளை அளவோடு பயன்படுத்திக் கொள்ள முடிவதனால் பெரிய பாதிப்புக்களை அது ஏற்படுத்துவதில்லை. ஆனால் கிரிக்கெட்டில் பயிற்சியின்போதும் சரி, போட்டிகளின்போதும் சரி பந்து வீச்சாளர்களே அதிகளவில் தோளைப் பயன்படுத்த வேண்டி இருப்பதால் இவர்களையே பெருமளவில் இக்காயம் பாதிக்கிறது.

## இது எப்படி ஏற்படுகிறது?

தோளை அதிகமாகப் பயன்படுத்தும் போது பந்துக்கிண்ண மூட்டில் காயம் ஏற்படுகிறது. சுழல்தசையில் ஏற்படும் கிழிசல் நரகவேதனையைத் தரும். மோசமான பயிற்சியினால் கூட இக்காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கால், இடுப்பு போன்றவற்றில் பந்துவீச்சாளர்களுக்குக் காயங்கள் ஏற்படுகின்றபோது அவர்கள் துல்லியமாகப் பந்து வீசுவதற்கு தோள்பட்டையையே அதிகளவில் வருத்திப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் இக்காயம் இலகுவில் ஏற்பட்டுவிடுகிறது.

## பாதிக்கப்பட்டவர் மீண்டும் பந்து வீச முடியுமா?

பந்துக்கிண்ண மூட்டுக் காயத்தை வைத்திய நிபுணர்கள் மூன்று நிலைகளாக வகுத்துள்ளனர். முதல்நிலை - சிறிய புண்கள். இரண்டாம் நிலை - சுழல்தசை கிழிந்து போதல். இவ்விரு நிலைகளிலும் உள்ளவர்களை ஓய்வின் மூலமோ அல்லது சத்திரசிகிச்சை மூலமோ இலகுவாகக் குணப்படுத்த முடியும். இறுதி நிலையில் - தோள்பட்டை முற்று முழுதாக சேதமாகி விடும். எலும்புகளில் கூட பெரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம். இவர்களையும் சிகிச்சைகளின் மூலம் குணப்படுத்த முடியுமெனினும் முன்புபோல அதே தோள்வலிமையோடு பந்து வீச முடியுமா என்பது சந்தேகமே!

## அதிகம் பந்து வீசியவர்கள்

**1996-97 காலப்பகுதியிலேயே பல வேகப்பந்து வீச்சாளர்கள் தோள் வலியால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இக்காலப் பகுதியில் அளவுக்கு அதிகமாகப் பந்து வீசிய உலகின் முதல்தர வேகப்பந்து வீச்சாளர்கள் சிலரின் விவரத்தைக் கீழுள்ள அட்டவணை தருகிறது.**

**(1996 பெப்ரவரிமுதல் 1997 பெப்ரவரி வரை)**

| பெயர் | டெஸ்ட் போட்டிகள | ஓவர்கள | ஒருநாள் சர்வதேசப போட்டிகள | ஓவர்கள் |
|---|---|---|---|---|
| ஸ்ரீநாத் | 9 | 428.5 | 40 | 366.3 |
| பிரசாத் | 10 | 380.0 | 38 | 345.4 |
| அக்ரம் | 5 | 199.4 | 34 | 281.4 |
| யூனிஸ் | 6 | 223.0 | 38 | 323.2 |
| அம்ப்ரோஸ் | 6 | 235.5 | 19 | 175.3 |
| வோல்ஷ் | 7 | 274.3 | 19 | 180.4 |
| டொனால்ட் | 6 | 217.4 | 23 | 210.5 |
| மக்ராத் | 7 | 236.5 | 22 | 198.0 |

...?

## ...ண்ணை மூட்டுவலி!

யாண்ட விதமும் யோசித்துப் பார்க்க வேண்டிய விடயமே. ஒரு சமயத்தில் ஸ்ரீநாத்தும், பிரசாத்தும் 10 முதல் 12 ஓவர்கள் வரை கூடத் தொடர்ந்து பந்து வீசினார்கள். அதனால் அவர்கள் மிகவும் சோர்ந்துபோக நேரிட்டது. ஒரு பந்து வீச்சாளர் சோர்வடைந்துவிட்டால் அவர் ஓடும் பாணியும் பந்துவீச்சின் துல்லியமும் பாதிப்படைகின்றன. எனவே பந்தை முன்போல திறமையாக வீசுவதற்கு தோளுக்குக் கூடிய வேலைச்சுமை ஏற்படுகிறது. இது அவரின் தோள்பட்டையின் உள்சதையின் பாதிப்புக்கு வழிவகுத்து விடுகின்றது.

அணித்தலைவர் பந்துவீச்சாளரை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதிலும் பந்து வீச்சாளரது ஆரோக்கியம் தங்கியிருக்கிறது. முன்னாள் இந்திய அணித்தலைவரான டெண்டுல்கர், ஸ்ரீநாத்தைப் பற்றிக் கூறும்போது, "ஸ்ரீநாத்துக்கு தோள் சரியாக இல்லாதிருந்தது என்பது எனக்குத் தெரியும். களைப்பாக இருந்தால் என்னிடம் கூறுங்கள் என்று அவரிடம் சொன்னேன். ஆனால் கூடுதலாக ஓரிரண்டு ஓவர்கள் போடவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. இறுதியில் பார்த்தால் ஒரு போட்டித் தொடரில் 25 ஓவர்களையாவது அவர் மேலதிகமாக வீச நேரிட்டு விடுகிறது. எங்களின் மற்றைய பந்துவீச்சாளர்கள் சுமாராகவே வீசுவதால் முன்னணி பந்து வீச்சாளர்கள் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கிறது" என்கிறார் அவர்.

முடநீக்கியல் நிபுணரான மும்பாயில் வசிக்கும் டாக்டர் ஜோஷி என்பவர் ஸ்ரீநாத்தின் தோள் உள்காயம் பற்றிய மருத்துவ அறிக்கையை ஆராய்ந்து தோளை அளவுக்கதிகமாகப் பயன்படுத்துவதால் மட்டுமே இக்காயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தினார். ஸ்ரீநாத்தின் தோளின் பந்துக்கிண்ண மூட்டுத்தசை கிழிந்து சேதமாகியிருந்தது. மின்காந்த ஒத்திசைவு பிம்ப அலகிடுதல் (MRI-ஸ்கான்) அறிக்கையில் எவ்வளவு நீளத்திற்குத் தசை கிழிந்திருக்கிறது என்பது தெரியாததால் மேலதிக சிகிச்சைக்காக அவர் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல நேரிட்டது. சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடிய இந்தக்காயம் சில மாதங்களுக்க ஓய்வெடுத்தால் தானாகவே ஆறிவிடும் என்றாலும் மீண்டும் தோளில் இக்காயம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். எனவே பந்து வீச்சாளர் ஒருவர் தோள் பட்டையில் சத்திரசிகிச்சை செய்து, குணமாகி மீண்டும் விளையாட வரும்போது அவர் மிக எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். தவறினால் அவரது தோள் பட்டைப் பாதிப்பு அவரது கையை நிரந்தரமாகப் பயன்படுத்த முடியாமலே ஆக்கிவடும்.

விளையாட்டு வீரர்கள் பொதுவாகவே சத்திரசிகிச்சை என்றால் பின்னிற்கிறார்கள். ஓய்வெடுப்பதன் மூலமே காயங்களை ஆற்றிக்கொள்ள முனைகிறார்கள். மைக்கேல் ஹோல்டிங், கபில்தேவ் போன்றவர்கள் தமக்கு ஏற்பட்ட தோள் காயங்களை ஓய்வு எடுத்து ஆற்றிக்கொண்டும், உடல் எடையைக் குறைத்துக் கொண்டும் மீண்டும் விளையாட வந்தார்கள். அவர்களின் அதிர்ஷ்டம் அவர்களால் திரும்பவும் பழையபடி சிறப்பாக விளையாட முடிந்தது. ஆனால் மேற்கிந்தியத்தீவுகளின் பழம்பெரும் வேகப்பந்து வீச்சாளர் வெஸ் ஹோலால் அது இயலவில்லை. அந்நாளில் டெஸ்ட் போட்டிகளும் மிகமிகக் குறைவு. ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் இல்லவே இல்லை. ஆனாலும் ஹோல் தோள் வலியால் அவதிப்பட நேர்ந்தது. அவரது அணித்தலைவர்கள் அவரை நாள் முழுக்கப் பந்துவீச வைத்தார்கள். 28 வயதிலேயே ஹோல் தெம்பிழந்து நிரந்தரமாக ஓய்வு பெற நேரிட்டது. உலகின் முதல்தர சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் கூட தோள்வலியால் அவஸ்தைப்பட்டார். சிகிச்சைக்குப் பின் ஆடவந்தபோது சரியாகப் பந்து வீச இயலாமல் தடுமாறினாலும் சமாளித்துக்கொண்டு பழைய நிலைக்குக் கடுமையான பயிற்சியின்பின் மீண்டார்.

ஒரு பந்து வீச்சாளருக்கு 21முதல் 32 வயது வரையான காலப்பகுதியே அதிமுக்கிய காலகட்டம். அக்காலப் பகுதியில் அவர் தனது உடல்நிலையைச் சரிவரப் பேணுவது அவசியம். அதுவே அவரது எதிர்காலக் கிரிக்கெட் வாழ்வைத் தீர்மானிக்கும். மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் தேர்தல் நெருங்கும் வேளை...

# அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவில் விரிசல்!

தமிழக சட்ட சபைத்தேர்தல் நெருங்கிவரும் இவ்வேளையில் -

ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளில் ஒன்றில் குற்றவாளியாக அவர் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில்-

மற்றைய வழக்குகளின் தீர்ப்புகளும் வழங்கப்பட உள்ள சூழ்நிலையில் -

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ள காங்கிரஸ் கட்சியின் போக்கில் சமீபகாலமாக பெரும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.



இதனால் அ.தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியில் திரும்பவும் பிளவு ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்த காலங்களில் எல்லாம் அவருக்குச் சாதகமான ஒருவரையே தமிழகத்தின் தனது மாநிலத் தலைவராக நியமிப்பது காங்கிரஸின் வழக்கம்.

ஆனால் அதற்கு மாறாக இம்முறை மாநிலத் தலைவராக ஈ.வி.கே.இளங்கோவனை தன்னிச்சையாக காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி அறிவித்ததால் ஜெயலலிதா மனக்கசப்பு அடைந்ததாகக் கூறப்படுகின்றது. அப்போது தான் கூட்டணி விரிசலுக்கு பிள்ளையார்சுழி போடப்பட்டதாக அவதானிகள் கூறுகின்றனர்.

## இருதரப்பும் விட்டுக் கொடுக்காத நிலையில் கூட்டணி அதிகநாள் நீடிக்கப் போதில்லை

### தன்னிச்சையான அறிவிப்பு

இந்த நிலையில், சமீபத்தில் தமிழக உள்ளூராட்சி மன்றங்களுக்கான இடைத் தேர்தல்களில் காங்கிரஸுடன் ஆலோசிக்காமல் அ.தி.மு.க. வேட்பாளர்களை ஜெயலலிதா தன்னிச்சையாக அறிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சோனியா கலந்து கொண்ட பிரசாரக் கூட்டமொன்றில் தானும் கலந்து கொள்வதாக அறிவித்திருந்த ஜெயலலிதா, சோனியாவை நீண்ட நேரம் தனது வருகைக்காகக் காக்க வைத்து விட்டு இறுதியில் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்று தகவல் அனுப்பியிருந்தார். இது சோனியாவுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று கொதிப்புடன் இருந்த காங்கிரஸார் இடைத்தேர்தல் வேட்பாளர்களை ஜெயலலிதா தன்னிச்சையாக அறிவித்ததை தன்மானப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு தங்களது வேட்பாளர்களையும் நிறுத்தினார்கள்.

இதனால் அ.தி.மு.கவுக்கும் காங்கிரஸுக்கும் இடையேயான பிணக்கு தீவிரமடைந்தது.

### வீரப்பன் விவகாரம்

இந்த நிலையில் நடிகர் ராஜ்குமாரை சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்த, தமிழக - கர்நாடக அரசுகளை கடுமையாகச் சாட ஆரம்பித்த ஜெயலலிதா வீரப்பனின் செயல்களைத் தடுக்க முடியாத இருமாநில முதல்வர்களும் பதவி விலக வேண்டும் என்று கூறினார்.

கருணாநிதியை விமர்சிப்பதுதான் ஜெயலலிதாவின் நோக்கம் என்றபோதிலும், காங்கிரஸைச் சேர்ந்த கர்நாடக முதல்வரை பதவி விலகக் கோரியது தமிழகக் காங்கிரஸாரை கோபமூட்டியது.

தமிழ்க காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.இளங்கோவன் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் -

"காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த முதல்வர் கிருஷ்ணாவை ராஜினாமா செய்யச் சொல்வது சிறுபிள்ளைத்தனமானது. அதுவும் ஐந்து ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்த ஒருவர் இப்படிக் கூறுவது அவரது அறிவு முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது. கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவை ராஜினாமாச் செய்யச் சொல்லும் உரிமை சோனியாவைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது" - என்று ஜெயலலிதாவுக்கு பதிலடி கொடுத்தார்.

தன்னை விமர்சிப்பவர்களை ஜெயலலிதா எப்படி நடத்துவார் என்பதை இளங்கோவன் உணராமல் இல்லை. அதையும் மீறி காங்கிரஸ் கட்சியினர் அ.தி.மு.க. எதிர்ப்பு நிலையை எடுத்துள்ளது குறித்து பல்வேறு தகவல்கள் கூறப்படுகின்றன.

தி.மு.க.கூட்டணியில் இருந்து பிரிந்து தனித்து நின்று தற்போது அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ள மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸுக்கு அளிக்கும் மரியாதையை ஜெயலலிதா தமக்குத் தருவதில்லை என்ற குறை காங்கிரஸ் கட்சியினருக்கு நீண்ட காலமாகவே உள்ளது.

### ஓர் ஆசனமாவது அதிகம் எதிர்பார்க்கும் காங்கிரஸ்

அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.காவும் காங்கிரஸும் ஒன்றாக உள்ள



சூழ்நிலையில், எதிர்வரும் 2001ஆம் ஆண்டு நடக்கவுள்ள சட்டசபைத் தேர்தலில் மாநிலக்கட்சியான த.மா.காவை விட ஒரு தொகுதி கூடவாவது தேசியக் கட்சியான தங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் த.மா.காவை விட அதிக பலம் காங்கிரஸுக்குக் கிடையாது என்ற போதும், தேசிய அளவில் வாஜ்பாய்க்கு மாற்றாக சோனியாதான் பிரசாரம் செய்ய முடியும என்ற நிலையே நிலவுகின்றது. அதுவும் தமிழகத்தில் சோனியாவின் பிரசாரத்துக்கு பெரிய அளவில் பலன் கிடைக்கும் என்று கருதும் காங்கிரஸார், த.மா.காவை விட ஒரு தொகுதியாவது அதிகமாகத் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

ஏற்கனவே பாரதீய ஜனதாக் கட்சியைப் பகைத்துக் கொண்டுள்ள ஜெயலலிதா காங்கிரஸையும் பகைத்துக் கொண்டால் பாதிப்பு அவருக்கே என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், ஜெயலலிதாவை தமது கோரிக்கைக்குத் தலையசைக்க வைக்கவே மோதல் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் கருதப்படுகின்றது.

**- பாமரன் -**

ஆனால் ஜெயலலிதாவோ, நடக்க இருப்பது தமிழக சட்டசபைக்கான தேர்தல் என்பதால் கூட்டணியிலிருந்து காங்கிரஸைக் கழற்றி விட்டு, த.மா.கா. துணையுடன் தேர்தலைச் சந்திக்கலாம் என்று முடிவு செய்துள்ளதாக அ.தி.மு.க.வினர் கூறிவருகின்றனர்.

இருதரப்புமே ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காத சூழ்நிலையில் அ.தி.மு.க - காங்கிரஸ் இடையேயான உறவு அதிக நாள்கள் நீடிக்கப் போவதில்லை என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ✦

## இளங்கோவின் அரசியல் பின்னணி!



ஜெயலலிதாவுடன் மல்லுக் கட்டும் தமிழக காங்கிரஸ் அணிக்கு அதன் புதிய மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஈ.வி.கே. இளங்கோவன் தலைமை தாங்குகின்றார்.

பெரும் அரசியல் குடும்பத்திலிருந்து வந்த இளங்கோவனுக்கு அந்தப் பின்னணி பெரும் கைகொடுக்கின்றது.

திராவிடர் இயக்கங்களின் தந்தை என்று வர்ணிக்கப்படும் ஈ.வி.கே. இராமசாமிப் பெரியாரின் சகோதரனின் மகன் ஈ.வி.கே.சம்பத்.

அறிஞர் அண்ணா போன்றோர் தந்தை பெரியாரையும் அவரது திராவிடர் கழகத்தையும் விட்டுப் பிரிந்தபோது அவர்களோடு சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவிப்பதில் பங்காற்றிய சம்பத், 1960களின் ஆரம்பத்தில் அண்ணாத்துரை - கலைஞர் கருணாநிதி அணியுடன் கருத்து வேற்றுமைப்பட்டு தி.மு.கவிலிருந்து பிரிந்து - கவிஞர் கண்ணதாசன் போன்றோரோடு சேர்ந்து - தமிழ்த் தேசியக் கட்சியை ஆரம்பித்தார். பின்னர் அதிலிருந்து விலகி காங்கிரஸில் சேர்ந்தார்.

சம்பத்தின் மனைவியான சுலோசனா சம்பத் - அதாவது இளங்கோவனின் தாயார் - இன்னமும் ஜெயலலிதாவின் பக்கத்தில், அ.தி.மு.கவில் தான் இருக்கின்றார்.

தாயார் ஜெயலலிதா அணியில்! மகன் ஜெயலலிதாவுக்கு எதிராகக் கோபம் கொண்டெழுந்திருக்கும் காங்கிரஸின் தமிழ் மாநிலத் தலைவர்!!

தமது கணவர் அமரர் ஈ.வி.கே.சம்பத்தின் நாடாளுமன்ற உரைகளைத் தொகுத்து சுலோசனா சம்பத் நூல் ஒன்றை வெளியிடுகின்றார். அந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினர் ஜெயலலிதா. ஆனால் சம்பத் - சுலோசனா தம்பதிகளின் மகனான இளங்கோவுக்கு அழைப்பில்லை.

தந்தையாரின் உரையை தாய் புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடும்போது மகனுக்கு அழைப்பு அனுப்பாத நிலையை கட்சி முரண்பாடு ஏற்படுத்தி விட்டது!

## த.மா.காவும் மிரட்டல்!



அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் த.ம.காவும் தன் பங்குக்கு ஜெயலலிதாவை மிரட்ட ஆரம்பித்துள்ளது.

தேர்தலில் வெற்றி பெறுவதே சந்தேகமாக உள்ள நிலையில், அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைத்தால், அமைச்சரவையில் தமது கட்சியினரும் இடம்பெற வேண்டும் என்று மூப்பனார் கூறிவருகின்றார்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் மூப்பனாரை மேடையில் வைத்துக் கொண்டே அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்தால் அரசில் கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவி தரமுடியாது என்று ஜெயலலிதா பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

இதனை அடுத்து த.மா.காவும் ஜெயலலிதாவுடன் மோதல் போக்கை ஆரம்பிக்கலாம் என்று ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

த.மா.காவும், காங்கிரஸும் கூட்டணியிலிருந்து வெளியேறினால் தி.மு.க.கூட்டணியிலிருந்து டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியைத் தன்பக்கம் இழுக்கலாம் என்று ஜெயலலிதா நினைப்பதாகவும் -

இதன் மூலம் வன்னியஇன வாக்குகளையும் தலித் அமைப்புக்களால் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளையும் பெற்று அ.தி.மு.க.விற்கு எப்போதும் உள்ள வாக்குகளுடன் சேர்த்து அடுத்த தேர்தலில் வாகைசூடலாம் என்று அவர் வெற்றிக்கணக்கை போடுவதாகவும் - கூறப்படுகிறது.

ஜெயலலிதாவின் கணக்கு மட்டுமல்ல, அரசியல்வாதிகள் அனைவரின் கணக்குகளையும் தவறாக்கக்கூடியது மக்கள் போடும் கணக்கு. அது என்ன என்பது தேர்தலின் பின்னரே தெரியவரும்.


உ

சிவமயம்



புதுவையூர்
அருள்மிகு மஞ்சள் உனா
ஸ்ரீ நகுல ஞானவைரவ
தேவஸ்தானம்

தீர்த்த உற்சவ விஞ்ஞாபனம்

29-08-2000 செவ்வாய்க்கிழமை

★ காலை 7.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம்
★ காலை 8.00 மணிக்கு பூஜை
★ காலை 9.00 மணிக்கு புத்தூர் - சுன்னாக வீதியூடாக வற்றாத வாவியாம் புனித கங்கை நிலாவரையில் சுவாமி எழுந்தருளுவார்.
★ காலை 10.00 மணிக்கு தீர்த்தம்

மஹோற்சவ குருக்கள்:
சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்

இங்ஙனம்,
உபயகாரர்கள்

(77757)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்லமுத்து முகாம், இல. 11, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த பர்ணாந்து அமலதாஸ் என்பவருடைய விசேட அ.அ. (இல. 0901006914) கோண்டாவில் சந்திக்கும் மானிப்பாய்ச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77745)

மார்க்கம்பரை, கோப்பாய் வடக்கு எனும் முகவரியைச் சேர்ந்த நல்லையா வசிகரன் என்பவருடைய விசேட அ.அ. (இல. 090301447) கோப்பாய்க்கும் நல்லூருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது கோப்பாய் வடக்கு, கிராம சேவகர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (77722)

புலோப்பளை, பளை எனும் முகவரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரகுமாரன் என்பவரது தேசிய அ.அ. (இல.601000555v) 20-08-2000 அன்று பண்டத்தரிப்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "சிங்கர் கொம்பனி சகாஜராஜா, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77769)

### விற்பனைக்கு

அலுமினிய பிற்றிங் மிக்சர், சோக்கேஸ் வண்டில், யூஸ் பக்கற் தயாரிப்பதற்குரிய Deafrezer உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 3 ஆம குறுக்குத்தெரு, இல. 54, யாழ்ப்பாணம். (77742)

புதிய மருன் நிறமுடைய HERO HONDA மோட்டார் சைக்கிள் (77 Km ஓடியது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: பா. ஜெகதீஸ்வரன் (பாலகிருஸ்ணா நகைமாளிகை), 86, நாயன்மார் வீதி, நல்லூர். (77753)

### மணமகன் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 8 இல் செவ்வாய், அவிட்டம் 3, கும்பம், 37 வயதுடைய, அழகான, சிறந்த குணமுடைய, படித்த, குடும்பப் பாங்கான பெண்ணுக்கு படித்த, அரச/தனியார் துறையில் தொழில் புரியும், தீய பழக்கங்கள் அற்ற, நற்குணமுடைய மணமகன் விரும்பத்தக்கது. ஜாதகம் மற்றும் சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1087, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (77762)

### 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

நல்லூர், ஓக.29

இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கு பகுதியில் குடியமர்ந்துள்ள மக்களுக்கான இரண்டாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு நாளை புதன்கிழமை முதல் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிவாரண உதவி பெறத் தகுதியானவர்களின் பெயர் விவரங்கள், அப்பகுதி கிராம அலுவலர்கள் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன.

பட்டியலில் இடம்பெற்றவர்கள், கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக தமது அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-111)

### சமூகமளிக்க கோரிக்கை

தென்மராட்சி, ஓக.29.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை நாளை புதன்கிழமை மேற்கொள்ள விருப்பதால் வலய அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள், சேவைக்கால ஆலோசகர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வடசெல்வராசா கேட்டுள்ளார். (க.17)

## 10 பொலீஸ் அதிகாரிகளுக்கு தேர்தலுக்கு முன் பதவி உயர்வு!

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் 10 பேர் உதவிப்பொலீஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்வு பெறவுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பணிகளை விரைவுபடுத்தும் நோக்கத்துடனேயே இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளதாகவும் -

இதன் மூலம் அடுத்த ஆண்டில் ஓய்வு பெறவுள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபர்களின் இடங்களுக்குப் புதியவர்களை நியமனம் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் -

பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

மேற்படி நியமனம் தொடர்பாக 50 சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)


**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு**

**SPOKEN ENGLISH**

**By: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்: 02-09-2K காலை 10.30 (S.L.T)

*விவரங்களுக்கு:*

பதிவாளர்,

**யாழ்ப்பாணக் கல்லூரி,**

(யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக, வர்த்தக வங்கிக்கு அண்மையில்)

(77768)


## ஓய்வு பெற்ற ஊழியர் கவனத்திற்கு

**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 01-01-1997 இலிருந்து பழைய சம்பளப் புள்ளியில் ஓய்வுபெற்ற ஊழியர்கள், காலஞ்சென்ற ஊழியர்களின் உரிமையாளர்களையும் 01-09-2000 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு இல. 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது காரியாலயத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

பொறுப்பதிகாரி,

*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.*

(C/12729)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி அதிபா

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

அவர்களின் தந்தையாரும், கல்லூரி நுண்கலை மன்றத்தின் செயற்றிறமைக்கு வழிகாட்டியாக இருப்பவருமான

**திரு. செ. நடராசா**

அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பவளவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடத்திய சிறுகதைப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், ஊழியர்கள்,

*இராமநாதன் கல்லூரி.*

*சுன்னாகம்.*

(C/12728)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**இராசவீதி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த கோப்பாய் நாவலர் வித்தியாலய உப அதிபர்**

**திரு. பாலு திலகராசா**

அவர்கள் நீதி, அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 28-07-2000 அன்று யாழ். மாவட்ட நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம அவர்களின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவரின் பணி மேலும் சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இராஜேந்திரன் இராஜ்குமார்
பத்மராசா பத்மரூபன் } லண்டன்
கருணாநிதி குடும்பத்தினர் - ஜேர்மனி,
வரதராசா குடும்பத்தினர்,
C. இராஜேந்திரம் குடும்பத்தினர்.

*கோப்பாய்-மத்தி.*

(77770)

## அழியா நினைவில்

கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவரும் சிறந்த மனித நேயத்துடன் செயற்பட்டவருமான

**அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்**

**(S.L.A.S)**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். இவர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த காலப்பகுதியில் எமது சங்கத்திற்குத் தன்னாலான அளப்பரிய உதவிகளைச் செய்தமை மறக்க முடியாதது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கும், உறவினருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
*பளை ப. நோ. கூ. சங்கம்,*
*பளை.*

(C/12727)

## ஆறாம் மாத நினைவுகளில்...

சின்ன மகவின் வரவு 30 - 05 - 1942



கணித மலையின் சரிவு 29 - 02 - 2000

இதயம் நிறைந்த கணித இமயம்

அமரர்

**வெக்ரர் பொ. வேலாயுதம்** B.Sc. அவர்கள்


காவியைக் காணும் கணிதரெல்லாம்
காவியில் உம்மை காண்பதனால்
காவிய நாயகரானீர் காவியரே!
ஓவியமாய் எம் மனங்களில் வாழ்கின்றீர்.

98, 99 கணிதப்பிரிவு மாணவர்கள்,
*உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,*
*உடுப்பிட்டி.*

(77767)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 19 - 02 - 1941



ஆண்டவன் அடியில் 30 - 07 - 2000

**அமரர் பொன்னையா இராசகோபால்**

(முன்னாள் பிரபல வர்த்தகர், ஸ்ரீதேவி ரான்ஸ்போர்ட் மற்றும் மண்ணெண்ணெய்க் குதம் உரிமையாளர்)

எங்கள் குலவிளக்கின் மரணச் செய்தி கேட்டு நேரில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எங்களது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன். இன்று (29-08-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு கொள்வதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

*"ஸ்ரீதேவி",*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*

(77553)

யாழ்ப்பாண... நூலகத்துறைப் படிப்பகம்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி K. P. சிங்கம் நாகேஸ்வரி

பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வெளிப்புலம் சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி பீற்றர் சிங்கோ நாகேஸ்வரி 27-08-2000 அன்று கொழும்பில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை தங்கலட்சுமியின் அன்பு மகளும் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலய மாணவர்களான துஷ்யந்தன், ரவீந்திரன், தீபன், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-08-2000) செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
K. P. சிங்கம்
(கணவர்)

வெளிப்புலம்,
சுன்னாகம்.
(77794)

## திருமதி சின்னத்தம்பி மாணிக்கம்

மூளாய் றோட், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்தம்பி மாணிக்கம் நேற்று (28 - 8 - 2000) திங்கட்கிழமை தாவடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும் நாகராசா தில்லைநாதன் (இளைப்பாறிய C. T. B. உத்தியோகத்தர்), நாகேஸ்வரி (முள்ளியவளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, தவமணி, காலஞ்சென்ற நடராசா (C. T. B.) ஆகியோரின் அன்பு மாமியும், சற்குணராசா, சசிகலா, வசந்தகுமார், றஞ்சிதகலா (கனடா), சாந்தினி, வாசுகி, றஞ்சன் (லண்டன்), ஈஸ்வரகுமார், தாட்சாயினி, கெங்காதரன், சிறிசிவானந்தன் (ஜேர்மனி), ஜீவராணி, வதனமோகன் (டோகா), சசிரேகா, சுபாகரன், கோசலா, மேகலா, ரூபகலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துர்ஷனா, வைஷ்ணவி (கனடா), சங்கீர்தா, உமா, வேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-8-2000) நண்பகல் 12.00 மணிக்கு தாவடியில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
நாகராசா (மகன்)
தில்லைநாதன் (மகன் - C. T. B)
நாகேஸ்வரி (மகள்)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்,
தாவடி.
(77789)

## திருமதி சிவகுரு பாக்கியம்

(சின்னமணி)

கெட்டியலூர் தொண்டமனாறைச் சேர்ந்த சிவகுரு பாக்கியம் அவர்கள் 28-08-2000 அன்று அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி சிவகுரு செட்டியாரின் அன்பு மனைவியும் விஜயராசா, இராமச்சந்திரன் (கனடா), பரமேஸ்வரி, ஜெகதாஸ் (கனடா), ரவீந்திரன் (கனடா), ஜெயரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசம்மா, நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (மின்சார சபை, பருத்தித்துறை), ஜெயா, கருணாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் இளையராசா, றாஜினி, சுஜேந்தா, சிவசுதன், வாசுகி, கல்யாணி, பாலமுரளி, திவ்யா, ஜெனிவ், நிதர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (28 - 08 - 2000) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கரணவாய் வடக்கு எள்ளங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. பாலசுப்பிரமணியம்
(மருமகன்)

கரணவாய் மத்தி,
நவிண்டில்,
கரவெட்டி.
(சி/12735)

## குட்டிப்பிள்ளை சின்னத்துரை

உடுப்பிட்டியைச் சேர்ந்த குட்டிப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று (28-08-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்புக்கணவரும் டாக்டர் அருந்தவராணி (ஆயுர்வேத வைத்தியசாலை வ. கி. பி. சபை, அச்சுவேலி உப அலுவலகம்) அவர்களின் அன்புத் தந்தையும் பா. கிருஷ்ணானந்தம் அவர்களின் அன்பு மாமனாரும் கி. சமர்ஹிதனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-8-2000) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. கிருஷ்ணானந்தம்
(மருமகன்)

அம்பாள் வைத்தியநிலையம்,
சந்நிதி றோட், உடுப்பிட்டி.
(சி/12737)

# இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள்

ஈவினை மத்தி கற்பகவிநாயகர் சன சமூக நிலைய மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் கற்பகவிநாயகர் முன்பள்ளி விளையாட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மேற்படி சனசமூக மன்றில் நடைபெறும்

சனசமூக நிலையத் தலைவர் இ. கரிகரன் தலைமையில் நடைபெறும் இந்தவிழாவில் வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கான வேக நடைப் போட்டி, ஓட்டப்போட்டி போன்ற பல போட்டிகளும் இடம்பெறவுள்ளன. (இ-69)

* **

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர் ஆகியோருக்கான மாதாந்த மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் நடைபெறும் என்று ப.தெ.வ.கூ.அ உதவி ஆணையாளர் சு. கணேசமூர்த்தி தெரிவித்தார். (ஜ-17)

# அரசும் புலிகளும்...

(முதலாம் பக்கத் தொடர்)

### தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்றால்

இதே கருத்தைத்தான் தமிழ்க் கட்சிகளும் கொண்டுள்ளன. எனினும் இவற்றின் பாதைகளும், அணுகுமுறைகளும் வித்தியாசமாக உள்ளன. அவற்றின் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை.

வடக்கு - கிழக்கில் சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் பொதுப்பட்டியலில் போட்டியிட்டால் தமிழர்கள் மொத்தம் 20 இடங்களைக் கைப்பற்ற முடியும். இதற்காக சகல கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இந்தப்பணியில் புத்திஜீவிகளும், அரசசார்பற்ற அமைப்பின் பிரதிநிதிகளும் தீவிரமாக ஈடுபட்டனர். சகல கட்சிகளும் தமது கட்சி நலனில் மட்டுமே அக்கறையாக இருந்த காரணத்தால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. டி. பியும் இந்த முயற்சியில் இருந்து முதலில் விலகின; தனித்துப் போட்டியிடப்போவதாக அவை அறிவித்தன.

இறுதியில் புளொட்டும், ஈரோஸூம்தான் இந்த முயற்சியில் மிஞ்சின. எனவே இரு கட்சிகளும் சேர்ந்து போட்டியிட முடிவு செய்துள்ளன,

### அம்பாறை நிலைமை

அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் அவ்விரு மாவட்டங்களிலும் போட்டியிடுவதில்லை என நாம் முடிவு செய்துள்ளோம்.

அம்பாறை மாவட்டத்தில் பொது வேட்பாளர் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கத் தமிழர் மகா சபை தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தியது. பெரும்பாலும் சகல கட்சிகளும் பொதுப்பட்டியலில் போட்டியிட இணக்கம் தெரிவித்துள்ளபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் நிபந்தனை விதித்து வருகின்றது.

தேசிய பட்டியல் மூலம் எம். பி பதவி ஒன்றைப் பெறுவதற்காகவே தமது கட்சியின் சின்னத்தில் பொது வேட்பாளர்கள் நிறுத்தப்படவேண்டும் என்று, கூட்டணி கோரி வருகின்றது.

தேசியப்பட்டியல் மூலம் ஒரு எம். பி. பதவியைப் பெறுவதில் அவர்கள் அக்கறை காட்டுகிறார்களே தவிர, அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்படுவது குறித்து கவலைப்படவில்லையே!

### அரசமைப்புத் திருத்தம்

தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் தமிழ் மக்களின் அபிலாசைகளை முற்று முழுதாகத் தீர்க்கப்போதுமானதல்ல என்பது உண்மையே. எனினும் எதிர்காலத்தில் பிரச்சினைக்குநிரந்தரத்தீர்வுகாண்பதற்கான அடித்தளமாக இந்த நகல் அமைந்துள்ளது.

இந்த நகலில் பல நல்ல அம்சங்களும் உள்ளன அதேசமயம் தமிழ்மக்களின் அடிப்படை அபிலாஷைகளைபூர்த்தி செய்யவேண்டிய வடக்கு — கிழக்கு இணைப்பு, காணி, நாட்டின் ஆட்சிமுறை ஆகியவை போன்ற விடயங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இவை தொடர்பாகச் சில திருத்தங்களை நாம் அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். அந்தத்திருத்தங்களை நகலில் இடம்பெறச் செய்வதாக ஜனாதிபதி உறுதி கூறியிருந்தார்.

ஆனால் அதற்கிடையில் அந்த நகல் மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

இதுவரை காலமும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எட்டப்பட்ட ஒப்பந்தங்களிலும் பார்க்கசிறந்த அம்சங்களை இந்த நகல் கொண்டிருக்கின்றது

### ஜனாதிபதியின் உறுதி

அத்துடன் பேரினவாதிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஜனாதிபதி இந்த நகலை நிறைவேற்ற உறுதி பூண்டு செயற்பட்டார். அடுத்த நாடாளுமன்றத்தில் இதை நிறைவேற்ற அவர் மக்களின் ஆணையைக் கோரிப் பிரசாரம் செய்து வருகின்றார்.

சிங்களம் மட்டும் சட்டம் மூலம் தனது தந்தை பண்டாரநாயக்கவும் தரப்படுத்தல் திட்டம் மூலம் தமது தாய் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளுக்குப் பரிகாரம் காணும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க துணிச்சலுடன் தீர்வுத் திட்டத்தை முன்னெடுப்பதில் அக்கறை காட்டி வருகின்றார்.

### புலிகள் பலமாக இருக்கும் போதே நல்ல தீர்வு கிட்டும்

விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும் நேரத்தில் தான் பேச்சு நடத்தி தமிழர்களுக்கு கூடிய அதிகாரங்களைப் பெறமுடியும் என்பதை மறுக்கமுடியாது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஈழம் கோரிக்கையில் உறுதியாகவே இருக்கின்றார். எனினும் பலமான நிலையில் உள்ள சமயம் பேரம் பேசும் தன்மையும் அதிகரிக்கும் என்பதை அவர் உணரவேண்டும். எதிர்காலத்தில் பலம் குன்றிய நிலைக்குப் புலிகள் செல்லும் பட்சத்தில் தீர்வு ஒன்றை எட்டுவது கஷ்டம் என்பதே எமது கருத்தாகும்.

### சந்திரிகாவின் ஆட்சியில்...!

ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்பே விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் தீவிரமானதாகக் கூறப்படுவதை ஏற்கத்தான் வேண்டும். அதே சமயம் இந்தக் காலகட்டத்தில் தான் விடுதலைப் புலிகள் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளனர் என்பதையும் மறக்கக்கூடாது.

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பாரிய முகாம்கள், வரலாற்றுப் பெருமை மிக்க ஆனையிறவு முகாம் ஆகியவற்றைப் புலிகள் வெற்றிகொண்டது சந்திரிகாவின் ஆட்சியில்தான் என்பதை சகலரும் அறிவர்.

யுத்தத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்குப் பதிலாக அரசும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமையான விடயமாகும். இதையே அரசு செய்கின்றது.

### பேசவேண்டும்

தற்போதைய யுத்தம் தொடர்ந்து இடம்பெறும் அதேசமயம் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் எந்தவித முன் நிபந்தனைகள் இன்றிப் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

இரு தரப்பும் பேச்சுக்களை முன் எடுத்து முக்கிய உடன்பாட்டுக்கு வரும் போது யுத்தமும் தானாக நின்று விடும்.

இது விடயமாக ஜனாதிபதியுடன் நாம் பேசியுள்ளோம். அவரும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இந்த விவகாரத்துக்கு முடிவு காண அவர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார். இதன் ஓர் அங்கமாகவே அவர் நோர்வே அரசு மூலம் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

தற்சமயம் நடைபெறவிருக்கும்தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றால் அரசியலில் பெரும் குழப்பம் ஏற்படும். அத்தகைய சூழலில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரக் கூடிய நிலை ஏற்படும் என நாம் நம்பவில்லை.

தமிழர் பிரச்சினையை அவர்கள் தீர்ப்பார்கள் என்று நம்பக் கூடிய அளவுக்கு அவர்களின் செயல்கள் அமையவில்லை—என்றார் அவர். (உ-3-5)

UNIVAC

Computer Information Technology

2000 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கு 80% சலுகைக்கட்டணத்தில் வழங்கப்படும். கணனிப் பயிற்சிக்கான விண்ணப்ப முடிவு திகதி 30-09-2000.

இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Director
UNIVAC.

120, K K S. Road,
Kokuvil,
Jaffna.

(77793)

## கண்ணீர் அஞ்சலி

28-08-2000 அன்று காலமான எமது நீண்டநாள் நிர்வாக உறுப்பினரும், பொதுநலத் தொண்டனும், இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தருமான,

### குரும்பசிட்டி அமரர். சி. இரத்தினம்

அவர்களது

குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

-குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்-

(77791)

# இரு மாத நிவாரணப் பொருள்களை அடுத்த மாதம் வழங்குவதற்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம்,ஓக.29

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்குரிய இருமாத நிவாரணப் பொருள்கள் அடுத்த மாதம் இரு கட்டங்களாக வழங்கப்பட உள்ளன.

செப்ரெம்பர் முதல் வாரத்தில் அந்த மாதத்துக்கான நிவாரணமும், அடுத்த வாரத்தில் ஒக்ரோபர் மாத நிவாரணமும் வழங்கப்படும் என்று யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளைச் செயலக அதிகாரிகளும் ப.நோ.கூ.சங்க நிர்வாகிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா போன்ற பொருள்கள் நிவாரணத்துக்கு வழங்கப்படவுள்ளன.

இரண்டு மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களையும் யாழ். செயலகக் களஞ்சியத்திலிருந்து தமது களஞ்சியங்களுக்கு எடுத்துச்செல்லும் நடவடிக்கைகளில் ப.நோ.கூ. சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

(ஐ-க-5)

# வெற்றி பெறுவது உறுதி எனவே வன்முறையில் ஈடுபடாதீர்!

## அமைச்சர் திஸநாயக்கா வேண்டுகோள்

கொழும்பு,ஓக.29

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வெற்றி பெறுவது நிச்சயம். எனவே எமது ஆதரவாளர்கள் எவரும் வன்முறைகளில் தொடர்புபட வேண்டாம்.

இளைஞர் விவகார, சமுர்த்தி, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறமாட்டாது என என்னால் வாக்குறுதி அளிக்க முடியாது. எனினும் அரசாங்கம் என்ற ரீதியில் வன்முறைகளை இயலுமானவரை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேர்தலின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒழுக்கக்கோவை ஒன்றைத் தொகுத்துள்ளார். எனவே தேர்தல் தொடர்பான வன்முறைகளில் ஈடுபடும் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

(ஐ-7)

## மாணவரின் அ.அட்டைகள்

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் பத்து மாணவர்களின் அடையாள அட்டைகள் இருப்பதாகவும் உரியவர்கள் அதனை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறும் அதிபர் கேட்டுள்ளார்.

அடையாள அட்டைகளுக்கு உரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

வத்சலா இலங்கைநாதன், விஜயராணி ஞானப்பிரகாசம், சுதர்ஸா பொன்னையா, கஸிசியுஸ்ரா அந்திரேஸ், மங்களேஸ்வரி விநாயகமூர்த்தி, புஸ்பதேவிநடராசா, யமுனா சிவராமன், பங்கராசா மேர்சி, வதனா புஸ்பராசா, மஞ்சுளா கேதீஸ்வரன்.

(க)

## சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,ஓக.27

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமான பரிசோதகர் - மேற்பார்வையாளர் சங்கம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் வருமான பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் தலைவராக அ.வாமதேவன் (பருத்தித்துறை நகரசபை), உப தலைவராக ஐ.தங்கராசா (வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை), பொதுச் செயலாளராக வீ. ஜெயரத்தினசிங்கம் (வலிகாமம் வடக்கு பிரதேச சபை), உதவிச் செயலாளராக வி.சிவபாலசிங்கம் (சாவகச்சேரி பிரதேச சபை), பொருளாளராக ம.ஜெயகுலசிங்கம் (வலிகாமம் கிழக்கு பிரதேச சபை) ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏனைய பிரதேச சபைகளிலிருந்து தலா ஒருவர் வீதமும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் செப்ரெம்பர் மாதம் பத்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்குரிய நிலத்துக்கு எல்லையீடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நில அளவைத் திணைக்களத்தால் இடப்பட்ட எல்லையில் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், பீடாதிபதி தி.கமலநாதன், டாக்டர் லயன் வி.தியாகராசா ஆகியோர் எல்லைக் கம்புகளை நட்ட போது எடுக்கப்பட்ட படங்கள். (ஐ)



கைதடியில் இருந்து இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை குழிப்பன் முகாமில் தங்கியுள்ள சிறுவர்களுக்கான பாலர் பாடசாலை ஒன்றை வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவைரும், வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் அண்மையில் திறந்து வைத்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும், விளையாட்டுப் பொருள்களும் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டன. (ஐ)


உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை (இலங்கை)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2000

30-08-2000 முதல் 10-09-2000 வரை.

**துர்க்கை அம்பாள் அடியார்களே!**

நிகழும் விக்கிரம ஆண்டு ஆவணித் திங்கள் 14 ஆம் நாள் (30-08-2000) புதன்கிழமை பூர்வபட்சமும், பூரநட்சத்திரமும் கூடிய நல்லோரையில் முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறத் திருவருள் வாய்க்கப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெற்றுப் பூர்த்தி தினமாகிய ஆவணித் திருவோணத்தில் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறவும் அம்பாள் கருணை பாலித்துள்ளார். இம்மஹோற்சவ காலங்களில் அம்பாள் அடியார்கள் விரதமனுஷ்டித்து ஆலயத்துக்கு வருகை தந்து அம்பாளை வழிபாடு செய்து உய்தியடைய வேண்டும் என்று அன்பாக வேண்டுகின்றோம்.

### முக்கிய குறிப்புகள்

1. கொடியேற்றம், கொடியிறக்கம் பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையினால் இவ்வுபயத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணமாகவோ, பவுணாகவோ, அரிசி முதலிய அன்னதானப் பொருள்களாகவோ அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவலகத்தில் பதிவுசெய்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பெயரில் அன்பளிப்புப் பெற அனுமதி வழங்கப்படவில்லை. எந்த அன்பளிப்பும கோயில் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும். அல்லது கடிதமூலமோ, வங்கி மூலமோ கோயிலுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், அங்கப்பிரதிட்டை பண்ணல் யாவும வெளி வீதியில் நடைபெற வேண்டும். திருவிழாக்காலங்களில் பொங்கிப் படைத்தல் மற்றும் நேர்த்திகள், திருமணம், தனிப்பட்டவர் அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது என்பதனை அறியத்தருகின்றோம்.
4. பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.
5. சைவத்தமிழ் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருதல் தவிர்க்கப்பட வேண்டும்.
6. கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்று விடுவது விரும்பத்தக்கது. இரவு நேரங்களில் எவரும் கோயில் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

★ தேவஸ்தான கணக்கு வங்கிகள்

- இலங்கை வங்கி – சுன்னாகம் க/கு – இல. 3155
- வர்த்தக வங்கி – யாழ்ப்பாணம் க/கு – இல . 12692
- இலங்கை வங்கி – பம்பலப்பிட்டி க/கு – இல. 0037 -02-0000397-4

தெல்லிப்பழை.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

(C/I.2221)


# அனலைதீவுப் பகுதிக்கு தனியான பனை, தென்னை வள கூ.சங்கம்

ஆரியாலை,ஓக.29

அனலைதீவுப் பகுதியில் தனியான பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அனலைதீவுப் பகுதியில் தற்போது இயங்கிவரும் கள்ளுத் தவறணைகளை ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

# பந்து வீச்சாளர்களை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ் தனது உடல் நலனில் அதிகூடிய அக்கறை காட்டியதால்தான் 37 வயதிலும் கூட சிறப்பாகப் பந்துவீசி கபில்தேவின் உலக சாதனையை முறியடித்து 475 விக்கெட்டுக்களுக்கும் மேலாக இன்றும் கூட விக்கெட்டுக்களை வீழ்த்தி நன்றாக விளையாட முடிகிறது. உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வேகப்பந்து வீச்சாளர்களுக்குப் போட்டிகளுக்கிடையே ஓய்வு தருவது அவசியம். இல்லையேல் ஸ்ரீநாத் போல அல்லல்பட நேரிடும். தோள்பட்டை காயம் ஆறி ஸ்ரீநாத் விளையாட வந்ததும் மறுபடியும் அவரது அணித் தலைவர்கள் அவரை அளவுக்கு அதிகமாகப் பந்து வீசவைப்பதால் மீண்டும் மீண்டும் அவரது பந்துக் கிண்ண மூட்டுத் தசையில் காயம் ஏற்படுகிறது. இதனால் அவர் கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெறவேண்டிய கட்டாயம் கூட ஏற்படலாம்.

தென்ஆபிரிக்கா தனது கிரிக்கெட் வீரர்களுக்குப் போதிய ஓய்வை வழங்கி வருகிறது. அவர்களின் உடல் நலனில் அதிக அக்கறை காட்டுகிறது. அவ்வணியின் தற்போதைய தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான ஷோன் பொலொக் இங்கிலாந்து கவுண்டி அணியான வோர்விக்ஷயருக்காக விளையாடச் சென்றபோது அவரை அளவுக்கு மீறிப் பந்து வீச வைக்கக்கூடாது என்று நிபந்தனை விதித்து 'கனவான் ஒப்பந்தம்' ஒன்றை உருவாக்கியது தென்ஆபிரிக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. ஆனால் அங்கே பொலக் மேலதிகமாகப் பந்து வீச வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வேளையில் 'தென்னாபிரிக்கக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருந்த அலிபாச்சர் உடனே வோர்விக்ஷயர் அணி மேலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தை நினைவுபடுத்தினார். தென்னாபிரிக்க அணியின் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான அலன் டொனால்டுக்கும் தேவையன அளவு ஓய்வை வழங்கி அவரது உடல்நலம் பாதிக்காதபடி போட்டிகளில் பங்குபற்றச் செய்து வருகிறது கிரிக்கெட் சபை. ஆனால் அவரோ அந்த ஓய்வுகாலத்தைக் கவுண்டி அணிகளில் விளையாடுவதற்குப் பயன்படுத்தி வருகிறார். அண்மையில் வோர்விக்ஷயர் அணி சார்பில் விளையாடிய டொனால்ட் களத்தடுப்பில் ஈடுபட்ட போது ஏற்பட்ட விபத்தில் எலும்பு முறிந்து ஆறுவாரங்கள் ஓய்வெடுக்க நேர்ந்துள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் பணத்துக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு ஓய்வு ஒழிச்சலின்றிப் போட்டிகளில் பங்குபற்றவே விரும்புகிறார்கள். இது அவர்களின் உடல்நலனிற்கு மிகக் கேடான விடயம் என்பதை அறிந்தும்கூட அவர்கள் அதைப்பற்றி அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் சில வீரர்கள தமக்குத் தேவையான ஓய்வைக் கோரிப் பெறுவதும் உண்டு. இது அவர்கள் எதிர்காலத்திலும் உடல் உபாதைகள் இல்லாது நன்றாக விளையாடுவதற்கு உதவிடும். முதலில் கிரிக்கெட் வீரர்கள் தங்கள் உடல் நலனைச் சீராகப் பேணுவதில் அக்கறை கொள்ளவேண்டும். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகளும் வீரர்களின் உடல்நலனில் போதிய அக்கறை காட்டவேண்டும். குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர்களின் நலன்கள் அதிக அக்கறையுடன் பேணப்பட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் வேகப்பந்துவீச்சின் தரத்தை மேம்படுத்த இயலும். அத்தோடு 'மேலதிகமாக ஓவர்களை வீசமாட்டேன்!' என்று சொல்ல வேகப்பந்து வீச்சாளர்கள் கற்றுக் கொள்ளவும் வேண்டும்.

★

## யாழ். ஆஸ்பத்திரியில்

# நோயாளர் பராமரிப்பில் புதிதாக 36 பேர் சேவை

அரியாலை,ஓக.29

யாழ்.போதனா வைத்தியசாலையில் தனியாள் நோயாளர் பராமரிப்புச் சேவையில் தற்போது 36 பேர் ஈடுபட்டு வருவதாக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் பிரிவு உத்தியோகத்தர் க.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த 36 பேரும் சுழற்சி முறையில் நோயாளர்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் 43 பேர் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கென சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பில் பதிவு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நோயாளர்களைச் சிறந்த முறையில் பராமரிக்கத் தவறும் பராமரிப்பாளர்கள் அச்சேவையில் இருந்து நீக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் நோயாளர் பராமரிப்புச் சேவையில் ஈடுபட்டு வந்த சிலரின் தவறுகள் காரணமாக இச்சேவையினை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவிடம் வைத்தியசாலை நிர்வாகம் அண்மையில் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

## மீண்டும் பஸ் சேவை

வவுனியா,ஓக.29

வவுனியாவில் இடைநிறுத்தப்பட்டிருந்த உள்ளூர் பஸ்சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. வவுனியா போக்குவரத்துச் சபை சாலை நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியாவில் அடுத்தடுத்து இரண்டு பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

(உ-க)

## முன்னாள் அரச அதிபரின் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஓக.29


யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கா.மாணிக்கவாசகரின் திடீர் மறைவுக்கு, யாழ். இந்து சமயப் பேரவை அனுதாபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமரர் மாணிக்கவாசகர் மனிதாபிமானமும், தேசபக்தியும், தமிழுணர்வும், இனப்பற்றும் மிக்கவராவார். தமது பதவிக் காலத்தில் எமது பகுதி இந்து நிறுவனங்களுக்கும் குறிப்பாக அநாதை இல்லங்களுக்கு தாராளமாக உதவியதுடன் மற்றவர்களையும் உதவுமாறு தூண்டியவர். நாடிவந்த ஏழை எளியவர்களுக்கு எப்போதும் கைகொடுத்து உதவியவர்.

இளைப்பாறிய காலத்திலும் பல்வேறு சமய, சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தியவர். அன்னாரின் இழப்பு எமது சமூகத்துக்கும், சமயத்துக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)



சரித்திரப்பிரசித்தி பெற்ற நல்லூர்க்கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் சிறப்புத் திருவிழாவான தேர்த்திருவிழா நேற்றுக்காலை இடம் பெற்றது. ஆறுமுகப்பெருமான் அழகிய சித்திரத் தேரில் பவனி வருவதைப் படத்தில் காணலாம். நேற்றைய தேர்த்திருவிழாவில் குடாநாட்டின் பல பா ங்களில் இருந்தும் வந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முருகனைத் தரிசித்துப் பரவசம் அடைந்தனர். *(படம்:- பொ.இராஜேஸ்வரன்)*


உ
சிவமயம்



# தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

## வருடாந்த உற்சவ கால நிகழ்வுகள்

**நிகழும் விக்கிரம வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் இன்று (29.08.2000) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி 42 நிமிடத்துக்கு கொடியேற்றத்துடன் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகும்.**

*4ஆம் திருவிழா ஆவணி 16 வெள்ளிக்கிழமை 01. 09. 2000 4 மணியளவில் சதுர்த்தி விநாயகரும் வேலவரும் எழுந்தருளல்*

*5ஆம் திருவிழா ஆவணி 17 சனிக்கிழமை (02. 09. 2000) காலைத் திருவிழா 8 மணிக்கு ஆரம்பம்*

*10ஆம் திருவிழா பூங்காவனம் ஆவணி 22 வியாழக்கிழமை (07. 09. 2000) காலை 9 மணி*

*11ஆம் திருவிழா கைலாச வாகனம் ஆவணி 23 வெள்ளிக்கிழமை (08. 09. 2000) காலை 8 மணி*

*சப்பறத் திருவிழா ஆவணி 26 திங்கள் (11. 09. 2000) மாலை 5 மணி*

**தேர்த் திருவிழா ஆவணி 27 செவ்வாய் (12.09.2000) காலை 8.30 மணி**

**தீர்த்தத் திருவிழா ஆவணி 28 புதன் (13.09.2000) காலை 8.30 மணி**

*அன்று மாலை மௌனத்திருவிழா 5 மணிக்கு*

*காலைத் திருவிழா 8 மணிக்கும் இரவுத் திருவிழா 4 மணிக்கும் நடைபெறும்.*

மு.கு:- திருவிழா சம்பந்தமாகவும் ஆலய கைங்கரியங்கள் பற்றியும் நேர்த்தி முதலிய விடயங்களுக்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும்

**ஆலயத்தில் அன்னதானம் வழங்குதல் மிகவும் சிறப்பாக 1998ஆம் ஆண்டு நடைபெற்றது போல நடைபெறும். அதனால் வழமைபோல அன்னதானம் வழங்க விரும்பும் அடியார்கள் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி சிறப்பாக அப்பணி தொடர ஒத்துழைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

பிரதமகுரு சிவஸ்ரீ.ச.கந்தசாமி ஐயர்
உலக குருநாத ஐயர், பிரதமகுரு
ஆலய உரிமையாளர், செல்வச்சந்நிதி தொண்டமனாறு.

★ வீதிகளில் வியாபாரம் செய்பவர்கள் அதற்குரிய இடங்களில் முன் அனுமதியைப் பெறும்படி நிர்வாகம் பணித்துள்ளது.

(T.1783)


# பக்தி பூர்வமாக நேற்று நல்லையில் ரதோற்சவம்

யாழ்ப்பாணம்,ஓக.29

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முடிந்ததும் ஆறுமுகப் பெருமான் வள்ளி-தெய்வயானை சமேதராய் 7.30 மணிக்கு தேருக்கு எழுந்தருளினார்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்று அதிகாலை முதல் நல்லைக்கந்தன் ஆலயத்தில் ஒன்று கூடி காவடி எடுத்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும், அடி அழித்தும் அங்கப் பிரதட்ஷணம் செய்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியதையும் காணமுடிந்தது.

மக்கள் நலன்புரிக்கழகம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் சாரணர் அமைப்புக்களைச் சேர்ந்த தொண்டர்கள் வீதி ஒழுங்குகளைப் பேணுவதிலும், பக்தர்களுக்கு முதலுதவி அளிப்பதிலும் ஈடுபட்டனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் நல்லைக் கந்தனின் தேர் உற்சவம் தொடர்பான நிகழ்வுகளை நேரடி ஒலிபரப்புச் செய்ததையும் காணமுடிந்தது.

இன்று காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். பிற்பகல் 4 மணிக்கு கொடி இறக்குதல் இடம்பெறும். (உ-7-10-15-31)

# சன நெரிசலில் சிக்கி பக்தர்கள் சிலர் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லைக் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவின் போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு பக்தர்கள் மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகி னர்.

பூலோகநாதன் ஸ்ரீகாந்தன் (வயது 30-புங்குடுதீவு), துரைராஜா இராசேந்திரா (வயது29-நல்லூர்), நல்லையா சற்குணராசா (வயது 42 - நல்லூர்) ஆகியோரே காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதே வேளை சனநெரிசல்களில் சிக்குண்டு மயக்கமடைந்த பக்தர்கள் சிலர் முதலுதவிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சன நெரிசல்களில் சிக்குண்டு சுயநினைவிழந்த நிலையில் இன்னொரு அடியவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்தது. (உ-7-15-10)

# படை முகாமைப் படம் எடுக்க முயன்ற குழு மீது தாக்குதல்

கொழும்பு,ஓக. 29

அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா புள்ளிமலையில் அமைந்துள்ள அதிரடிப்படை முகாமை நேற்று முன்தினம் வீடியோப் படம் எடுக்க முயன்றதாகக் கூறப்படும் குழு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலால் அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும்-

மற்றும் ஐவர் காயம் அடைந்ததாகவும் - அது மேலும் தெரிவித்தது.

உயிரிழந்தவரின் சடலம் மற்றும் கிரனேட் செலுத்தி, தொலைத் தொடர்புக் கருவி, 15கிரனேட்டுக்கள், வீடியோ கமெரா பற்றறி ஆகியவற்றைப் படையினர் கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-க-3)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 28ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

511/156856/A 511/157006/A
511/157101/A

**கோப்பாய்**

511/144921/A 511/144944/A
511/144947/A 511/150830/A
511/150830/B 511/150830/C
511/150830/D 511/150830/E
511/150831/A 511/150831/B
511/150831/C 511/150831/D
511/150841/A 511/150841/B
511/150854/A 511/150854/B
511/150854/C 511/150871/A
511/150904/A 511/150904/B
511/154317/A 511/154317/B
511/154317/C 511/154318/A
511/154335/A 511/154335/B
511/154344/C 511/154349/A
511/154349/B 511/154360/A
511/154360/B 511/154371/A
511/154371/B 511/154371/C
511/154382/A 511/154415/A
511/157102/A 511/157107/A

**நல்லூர்**

511/136851/A 511/144904/A
511/144904/B 511/156696/A
511/157005/A

**உடுவில்**

511/156695/A 511/156699/A
511/156818/A 511/156818/B
511/156818/C 511/156818/D
511/156823/A 511/156823/B
511/156823/C 511/156838/A
511/157605/A 511/157605/B
511/157639/A

## என்.டி.ரி. கற்கை நெறி
# மொறட்டுவ பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு

கொழும்பு,ஒக.29

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (என்.டி.ரி.) கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு, இதுவரை பல்கலைக் கழகத்துக்குச் சமுகமளிக்காத யாழ். மாணவர்கள் தமது பதிவின் தாமதம் பற்றிய காரணத்தை உடனடியாக "பக்ஸ்" மூலம் பல்கலைக்கழகத்துக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆங்கிலத்தில் அனுப்பப்பட வேண்டிய மேற்படி பக்ஸ் செய்தியில் - பல்கலைக்கழகத்தால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட பதிவு விண்ணப்பங்கள் தமக்கு வந்து சேராமை பற்றிய விவரமும் மேற்படி கற்கை நெறிக்குப் பதிவு செய்யத் தாங்கள் விரும்புவது பற்றிய விவரமும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் -

01- 647622 என்ற "பக்ஸ்" இலக்கம் மூலம் மாணவர்கள் தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும் எனவும் -

மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் நேற்று உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள பக்ஸ் செய்தியில் தெரிவித்துள்ளது.

இதேவேளை மேற்படி மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு நேரில் சமுகமளிக்கும் போது பாடசாலை விடுகைப்பத்திரம், பாடசாலை நற்சான்றிதழ், ஜீ.சி.ஈ. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், பிறப்புப்பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றைக் கையளித்தல் வேண்டும் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்.டி.ரி. கற்கைநெறிக்குத் தெரிவான யாழ். மாணவர்கள் பலர் தமக்கான பதிவு விண்ணப்பங்கள் வந்து சேராமையால் இதுவரை கொழும்பு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு நேற்றுக் காலை 8.45 மணி முதல் பிற்பகல் 4.45மணி வரை யாழ்.செயலக தேர்தல் திணைக்களம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரவின் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் வருமாறு:-

காசிப்பிள்ளை செந்திவேல் (முதன்மை வேட்பாளர்), சோமசுந்தரம் தேவராஜா, கனகசபை தேவதாசன், சந்திரா நவரத்தினம், கனகசபாபதி நடராசா, அந்தோனிப்பிள்ளை ஜோசப் எட்வேட், உதயராணி தம்பையா, கார்த்திகேசு கணபதிப்பிள்ளை, சிவசம்பு ஞானேஸ்வரன், நாகலிங்கம் சிறீதரன், நீக்கிலாப்பிள்ளை அருட்பிரகாசம், கந்தையா ரவீந்திரன்.

இந்த வேட்பாளர்களில் கா.செந்திவேல், உதயராணி தம்பையா ஆகியோர் பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்களாவர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி இன்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது. (உ-5)

## இன்று கப்பல் சேவை

திருமலையில் இருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் 275 பயணிகளுடன் நேற்றுமாலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது.

இன்று காலை பருத்தித்துறை வரும் இக்கப்பல் ஒருதொகுதி பயணிகளுடன் மாலையே திருமலை நோக்கிப் புறப்படும். (உ-3-8)

## படை அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது.

பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீர்க்கமான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் இந்தத் தருணத்திலும் சில ஊடகங்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வது கவலைக்குரிய விடயமாகும் - இப்படி விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-7)

## கிஷோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டது தொடர்பாகவே கிஷோர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரது கைது ஓர் அரசியல் பழிவாங்கல் என்ற குற்றச்சாட்டும் முன்னர் எழுந்திருந்தது.

விடுவிக்கப்பட்ட கிஷோர் அனேகமாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் ஐ.தே.கட்சியில் போட்டியிடக் கூடும் என சில வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7-8-164)

## ஐ.தே.கட்சியின் முடிவு இன்று

எதிர்வரும பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதா என்பது குறித்து ஐ.தே.கட்சி அனேகமாக இன்று முடிவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமது கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடக் கூடிய பிரமுகர்களின் விவரங்களை அக்கட்சி ஆராய்ந்து வருவதாகவும் தெரிய வந்தது. (உ)

## சென்.ஜோன்ஸ் தொண்டர்களுக்கு

நாளை ஆரம்பமாகும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் சேவையாற்றுவதற்காக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை உறுப்பினர்கள் இன்று அழைக்கப்பட்டுள்ளனர். (உ-7)

## சரசாலையில் தாக்குதல்

சரசாலையில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது கடந்த சனியன்று பிற்பகல் 5.45 மணியளவில் படையினர் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத்தாக்குதலில் புலிகள் தரப்பில் இரு உறுப்பினர்கள் காயம் அடைந்தனர் என அவர்களின் தொலைத்தொடர்பு மூலம் தெரிய வந்ததாக அந்த நிலையம் மேலும் தெரிவித்தது. (உ-க-3)

## எழுச்சி ஊர்வலம்

வற்றாப்பளையில் ஞாயிறு மாலை பெண்கள் மெழுகுவர்த்தி ஏந்தி எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இந்த ஊர்வலத்தில் ஏராளமான பெண்கள் பங்குபற்றினர்.

# 5 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி, மொனராகல, காலி, அம்பாந்தோட்டை,வன்னி ஆகிய மாவட்டங்களில் ஐந்து சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணியே வன்னியில் சுயேச்சைக் குழுவாக வேட்புமனுத் தாக்கல் செய்தது.

கந்தையா ஞானதாஸை முதன்மை வேட்பாளராகக் கொண்ட இந்தக் குழுவில் அன்ரன் இம்மானுவல் சில்வா, எஸ்.பி.லம்பேட், ஆதம் ரகுமத்துல்லா, ச.சிவகுமார், மு.சாந்தகுமார், செபமாலை திஸவீரசிங்கம், செபதேயு கிலோடியஸ், இ.முருகேஸ்வரன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் பணி நேற்று ஆரம்பமானதைபொட்டி தேர்தல் செயலகங்களாகச் செயற்படும் மாவட்டக் கச்சேரிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு மூவர் மட்டுமே செயலகங்களுக்குள் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணி எதிர்வரும் 4 ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றது.

(உ-க-3-7-8)


புதிய
வீடியோ CD வெளியீடு
* கண்திறந்து பாரம்மா
சத்தியராஜ் நடிப்பில்
* உன்னைக் கண் தேடுதே
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ். றோட்,
(77795) கோண்டாவில்.

படிவம்
கல்விக் கல்லூரி, SLEAS - III
விண்ணப்பப்படிவங்கள் விற்பனையாகின்றன. SLEAS - III
விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2000
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C/12732)

எமது இன்றைய
வீடியோ CD வெளியீடு
சத்தியராஜ் - குஷ்பு நடித்த
உன்னைக் கண் தேடுதே
காலை 10 மணிக்குப் பிரதிகளைப் பெறலாம்.
சுஜீர் வீடியோ விஷன்
பஸ் நிலையம்,
அச்சுவேலி. (C/12738)

புலமைப்பரிசில் 2000
எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய பதிவுகளை மேற்கொண்டோருக்கான வகுப்புக்கள், வரும் 02.09.2000 சனிக்கிழமை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். இது வரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் 01.09.2000 க்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு இப்பிரிவில் இணைந்து கொள்ளவும்.
J.T.I -Director
No.07, Palaly Road,
Jaffna.
(இலுப்பையடிச் சந்தி அருகில்) (C/12688)

MATHS CENTRE
NELLIADY
A/L. 2000 எடுத்த மாணவர்களுக்கான விசேட
ENGLISH CLASSES
ஆசிரியர் ~ திரு. ஜோதி
* இரு பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
* மாணவர்கள் முன்கூட்டியே அனுமதி பெறவும். மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. (C/12725)
ஆரம்பம்: 30.08.2000 புதன்கிழமை 7.00a.m. (ப.நே)

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRILANKA
Regd No.15251 T.P-3335
தொழிற் பயிற்சிகள்

➢ RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வி., வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 9 மாதங்கள்)

➢ MOTER REWINDING and ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

➢ MOTER CYCLE MECHANISM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 5 மாதங்கள்)

➢ AIR CONDITIONING and REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

➢ CITTY and GUILDS of LONDON EXAM
(1) POWER (2) ELECTRONICS

IN VIEW OF OUR 21 ANNIVERSARY J.T.I.

Note: எமது நிறுவனத்தில் தொழிற்பயிற்சிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் 31.08.2000 க்கு முன்னர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முன்னர் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களும் மற்றும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்களும் அனுமதி அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
05.09.2000 (கிழமை நாள்களில்)
10.09.2000 (சனி, ஞாயிறு நாள்களில்)

மேலதிக விவரங்களுக்கு நேரில்

52/1, Stanley Road,
Jaffna.
(றெயில்வே கடவை அருகில்)

No.7, Palaly Road,
Jaffna.

- DIRECTOR
(C/12722)

யுத்த அவலம் நீங்கி - உங்கள்
இயல்பு வாழ்க்கை திரும்பி
நிம்மதியான வாழ்வு நிலைக்க
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
உங்கள் வாக்குகளை அளியுங்கள்!
(ஈ.பி.டி.பி)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

(C/12726)

யாழ். நகரில் அண்மையில் ஈ.பி.டி.பியால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் குறைதீர்க்கும் சேவை மையத்துக்கு, 4000 திற்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்திருந்தனர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-08-2000 இல்